636

636
2.52

ஸம்புடம் 11
ஸஞ்சிகை 5

ஸ்ரீ:

நந்தன-ஹு
வைகாசி மீ

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா

ஸ்ரீ அழகியசிங்கர் நியமநத்தால்
மாதந்தோறும் ப்ரசுரமாகும்
ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்திரிகை

यस्याभवद्भक्तजनार्तिहन्तुः पितृत्वमन्येष्वविचार्यतूर्णम् ।
स्तम्भेऽवतारस्तमनन्यलभ्यं लक्ष्मीनृसिंहं शरणं प्रपद्ये ॥

தனிப்ரதி விலை 0-4-0

MAY 1952
VOL 11 NO 5.

52
[illegible] 51
N52.11.5
199533

விஷய ஸூசிகை

விஷயம்		பக்கம்
1. ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்	...	96
[ஸ்ரீ. உப. A. V. கோபாலாசார்ய ஸ்வாமி, M. A. B. L. அட்வோகேட், திருச்சி.]		
2. பெரிய திருமொழி	...	99
[ஸ்ரீ. உப. ஓரகடம் K. ஸுதர்சனாசார்யர், ரிடையர்ட் தமிழாசிரியர், அவளூர்.]		
3. சென்றுகாண்டற்கரியகோயில்	...	104
[ஸ்ரீ. உப. பாதூர் தூப்புல் ராமபத்ராசார்ய ஸ்வாமி, வ்யாகரண சிரோமணி, வேதாந்த வித்வான், ஸ்ரீ அஹோபிலமடம், திருவள்ளூர்.]		
4 உஷஸ்தி	...	108
[ஸ்ரீ. உப. வித்வான், திருவரங்கம் திருமலைதாதாசார்ய ஸ்வாமி, M. O. L. திருப்பதி.]		
5. ஸத்க்ருத்யம்	...	112
[ஸ்ரீ. உப. மாடபூசி புராணம் வித்வான் வடுவூர் ஸ்ரீ. ராமபத்ராசார்ய ஸ்வாமி, ஸ்ரீ ஸந்நிதி ஆராதகர். ஸ்ரீ அஹோபிலமடம், திருவள்ளூர்.]		
6. நமது ஸம்ஸ்க்ருதகலாசாலை	...	116
[ஸ்ரீ. உப. கல்யாணபுரம் ஈச்சம்பாடி, T. ராமஸ்வாமி ஐயங்கார், M.A.,L.T., ஸ்ரீ அஹோபிலமடம் ஸம்ஸ்க்ருதகலாசாலை கௌரவாத்யக்ஷர், சென்னை.]		
7. புஸ்தகங்கள் வரவு	...	118
8. செய்திகள்	...	119
9. நம்மாழ்வாரும் நரசிங்கனும்	...	120
[ஸ்ரீ. உப. நடாதூர் க்ருஷ்ணமாசார் ஸ்வாமி.]		
10. சாஸ்த்ராநுபந்தம்		
(8) வரம்		

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:



ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

ஸம்புடம் 11 } நந்தன ஸ்ரீ வைகாசி மீ { ஸஞ்சிகை 5

'அஹோபிலே காருடசைலமத்யே
க்ருபாவசாத் கல்பிதஸந்நிதாநம் ।
லக்ஷ்ம்யா ஸமாலிங்கிதவாமபாகம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் சரணம் ப்ரபத்யே ॥'

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா ஸ்ரீமந் ந்ருஸிம்ஹகருணோத்திதா ।
ஸ்ரீ ந்ருஸிம்ஹகடாக்ஷேண ஜீயாதாசந்த்ரதாரகம் ॥
ந்ருஸிம்ஹபக்தாநாம் கேஹே கேஹே ஸதா வஸேத் ।
ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியாஹ்யேஷா ந்ருஸிம்ஹப்ரியயா ஸஹ ॥

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா' என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக் கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா' என்னும் பத்ரிகை, ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹாலக்ஷ்மியுடன் நித்யமாக வஸிக்கக்கடவது.]

ஸ்ரீ:

ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

அந்த ப்ரதிஜ்ஞையை நிறைவேற்றுவதற்காக ப்ரக்ருதிமண்டலத்தில் நீர் உம்முடைய பரமபதவாஸத்திலிருந்து இங்கே பகவதவதாரம்போல அவதரித்தீரேயொழிய நீர் இந்த மண்டலவாஸியல்ல. ஸ்ரீமாந் தத்த்வபோதம்—என்னவேணும்? நீளமான தண்டகம் பாடினீரே உத்தேச்யத்தைச் சொல்லும். உம் உட்கருத்துதான் தத்வம். 'மிக்கவேதியர் வேதத்தினுட்பொருள் நிற்கப்பாடி என் நெஞ்சுள் நிறுத்தினன்' என்றபடி உம்முடைய மறையின் உட்பொருளைத் தெளியவறிந்த சடகோபமுனி அப்பொருளை மதுரகவி நெஞ்சில் நிறுத்தினர். ஆம்நாயத்தின் உட்கருத்தையறிய ஆம்நாயபகவானையே உபாஸிக்கவேணும் 'ச்ருதாய தேவ மஹதாந் உபாஸநீய:' என்று வாசஸ்பதிமிச்ரர் பாமதியில் கூறினர். நீர்தான் ஆம்நாயபகவான். நீர் கருதும் உண்மை ஜ்ஞாநத்தை (தத்வஜ்ஞாநத்தை) எனக்குப் புகட்டவேணும். என் நெஞ்சில் நிறுத்தவேணும். 'ஸ்ரீமாந் ஸ்தைர்யம்:—அசைக்கமுடியாமல் சாச்வதமாய் நிற்கும்படியருளவேணும். வெறும் ஜ்ஞாநம் போதுமோ? அந்த ஜ்ஞாநமும் ஒருதரம் வந்தால் போதுமோ? அதன் ஆவ்ருத்தியெனும் உபாஸநம் வேண்டாமோ? அந்த உபாஸநம் (ஆவ்ருத்தி) மஹாப்ரயாணம் வரையில் யாவதாயுஷம் வேண்டாமோ? வேணும். பக்திதேநும்—பக்தியெனும் ஸுரபியை எனக்கு அருளவேணும். அந்த ஸுரபி எனக்கு மேலும் மேலும் நாள்தோறும் பக்திப்பாலைச் சுரந்துகொண்டே இருக்கவேணும். மேல்மேல் பர்வங்களைச் சுரக்கவேணும். எனக்கு அளிக்கும் பக்திதேநு (சுரக்கும்சுரபி) அநேகருக்கு அது சுரந்துகொண்டேயிருக்கவேணும். 'வாசம் தேநும்' என்று ச்ருதி. நீர் வேதவாக், நீர் ஓர் மஹாஸுரபி. நீரெனக்கு பக்திசுரபியையருளவேணும். ஸ்ரீமாம்—அந்த பக்தியும் அத்யுத்க்ருஷ்டமாயிருக்கவேணும். மேல்மேல்பர்வங்களைச் சுரக்கும் ஸுரபியாயிருக்கவேணும். என்ன பால்? ஆநந்தப்பால். ப்ரஹ்மாநந்தமெனும் மஹாநந்தப்பால்; மோக்ஷமெனும் மஹாநந்தப்பாலைச் சுரக்கும் பக்திக்காராம்பசு. எந்த விஷயத்தில் பக்தியெனும் ப்ரீதி ஸ்நேஹம்? ஜகத்காரணமான மூலக்கிழங்கு விஷயத்தில். ஜகந்மூலகந்தே—நாபிக்கமல முதற் கிழங்கே என்று சடகோபன் கடைசித் திருவாய்மொழியில், பரமபதம் செல்லுகையில் பாடிய கிழங்கே விஷயம், அதற்குப் பெயர் உண்டோ? ஸ்ரீமுகுந்த கந்தே—முகுந்தனெனும் கிழங்கு; பக்திக்கு மோக்ஷம் தரும் மூலக்கிழங்கு. மோக்ஷம் என்பது என்ன? 'ஸர்வாந் காமாந் ஸமச்நுதே' என்கிற ஸர்வ இன்பச்சேர்த்தி. சிற்றின்பங்களான வீண் காமங்களுமதில் சேர்ந்ததோ? இல்லை. க்ஷுத்ராந் காமாந்—ஹேயமான கெடுதலான காமங்களை கலசாதது. 'ஜக்ஷத் க்ரீடந் ரமமாண: ஸ்த்ரீபிர்வா யாநைர்வா' என்பதெல்லாம் ப்ரஹ்மாநந்தபரீவாஹமான அப்ராக்ருத திவ்யகைங்கர்யகாமங்கள். அஹீநாந்தக:—பாம்பு ராஜாக்களை முடிக்கிறவர். விஷங்களையெல்லாம் போக்குபவர். விஷயவிஷங்களுக்கு இடந்தருவரோ? விஷத்தினும் கொடியது விஷயம். ஒரு எழுத்து அதிகம்.

ஸம்வத் ப்ராக் ச்ருத விஷயாந்—நான் கேட்டிருக்கும் பாஞ்சராத்ராகமப்பொருளும் என் மனத்திற்கு வருகிறது.

வ்யக்தம் ஸம்ப்ராஹ ஸம்யக் விச்வத்ராணாய
ஹரே: । வ்யசிதா வாங்மநோபி:
விக்ஷ்வஸ்ய ஸாது விசேஷ்ய ॥

விச்வத்ராணாத்—எல்லா உலகத்தையும்; எல்லா ஜீவர்களையும் மோக்ஷணம் செய்து வீடு சேர்ப்பதே ஹரியின் அநாதிமநோரதம். அதற்காகத் தேவரீர் ஸம்ரம்பப்பட்டு, உடனே விடு

விப்பதாக, 'ஸஹஂ த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி' என்று ஸங்கல்பத்தைச்செய்ய வேண்டியபடி நேரவேணுமென்று ஆசை அதற்குத் தடை ஜீவர்களாலேயே இருந்துவந்தது. முன்பே இருந்த இந்த மோக்ஷணஸம்ரம்ப ஸங்கல்பஆசைகள் ஆசைப்படுவதோடு நின்று வெளிக்கிளம்பும் தசையை அடையாமலிருந்தன. ஸம்ஸாரங்களை ஹரணம் செய்யுமாசையோடுகூடியவரே ஹரி. இப்பொழுது இவ்விரண்டும் வ்யக்தமான தசையோடு ஆவிர்பவிக்கின்றன. உள்ளே இருந்த ஆசை இப்பொழுது வெளிக்கிளம்பி வ்யக்தமாகிறதை 'வ்யக்தௌ' என்று ச்லோகத்தொடக்கத்திலேயே வைத்துக்காட்டுகிறார். இரண்டு தத்வங்கள் வ்யக்தியடைகின்றன. வெளியே ப்ரகாசிக்கின்றன. உம்முடைய ஸேவை கிடைக்கிறது. நீர் ஸங்நாஹம்- மோக்ஷஸம்ப்ரம்பம்- என்னும் தத்வம். உறுதியான ஸங்கல்பம் ஏற்படுமுன் அதற்காகத் த்வரிக்கும் தசை. வேதபுருஷனநுக்ரஹத்தால் அவர் ஹ்ருதயமான தத்வம் நெஞ்சிலுதித்து, ப்ரீதிரூபமான ஜ்ஞாநமெனும் பக்தி (இன்பம்) ஏற்படுகிறது. ஆகம ஸூத்ரை--நாராயணனாலேயே ஸ்வயம் கூறப்பட்ட பாஞ்சராத்ராகமங்களிதை விளக்குகின்றன. நாராயணனே வேதமாகிய உம்முடைய உட்கருத்தைப் பல ஆகமங்களால் இந்த இரண்டு தத்வங்களையும் வ்யக்தமாக்கி இருக்கிறார். என்ன இரண்டு? பக்ஷீச்வர ஸுதர்ஶனௌ--நீரும் மோக்ஷணஸங்கல்பதத்வமான ஸுதர்சனரும். மூலகாரணத்தை அழைத்த கஜேந்த்ராழ்வார் விஷயத்தில் (இது ஸர்வலோகஸாக்ஷிகமாக விளக்கப்பட்டது) அதி த்வரையோடு அதிஸங்நாஹத்தோடு, அதிஸம்ப்ரம்பத்தோடுபொய்கைக்குஸுதர்சநஹஸ்தராய் எழுந்தருளி ஸுதர்சநரைக்கொண்டு ஸம்ஸாரபந்தமெனும் முதலையின் பிடியிலிருந்து மோக்ஷணம் செய்யப்பட்டது. இதை முதலங்கம் 85ம் ச்லோகத்தில் 'ஸஹஂகாரஹ்ராஹவ்ராஹ ... ...' என்று ஸூசித்தார்.

அங்கேயே 88-வது ச்லோகத்தில் 'அநாதிதுர்க்கமானமாயாராத்ரிநாதனுடைய ஸங்கல்பஸூர்யவிபவத்தால்தொலையவேண்டு'மென்று கூறப்பட்டது. நாடகாரம்பமுதல்ச்லோகத்திலேயே 'தஸ்யைவ ஸர்வவிஹதிஷ்யேணை' என்றதாலேயே ஸுதர்சநரெனும் ஆயுதச்ரேஷ்டரையுடைய நாராயணன்தான் ஸம்ஸாரமோக்ஷணஸங்கல்பம் செய்பவரென்பதை ஸூசித்ததை அங்கே முன்பே விளக்கியுள்ளோம். 'வ்யக்தௌ' என்பது ஸ்வாமியின் ச்லோகம்.

> 'யதா தேவஸ்ய ஸங்கல்பஸ்ஸுதர்சநஸமாஹ்வய: । க்ரியாஶக்தி ஸ்வரூபேண காரகத்வம் வ்ரஜேத்ததா ॥'

என்பது பாஞ்சராத்ரச்லோகம். இந்தத் திருவாயுதங்கள் நம்மை விடுவிப்பதென்கிற அவருடைய மநோரதத்திற்கு விரோதிகளைத் தொலைக்கத்தான். அவராசைப்படும் நம்முடைய மோக்ஷணத்திற்கு இவை காரகஸம்பத் ஸாமக்ரீ.

இங்கே 'வ்யக்தௌ' என்று பக்ஷீச்வரர், ஸுதர்சநர் இருவரும் வ்யக்தமாய் ப்ரகாசிப்பதைக் கூறியுளது. பக்ஷீச்வரர் வ்யக்தராகி விட்டார். ஸுதர்சநர் வ்யக்தராய்க்கொண்டு உடனே ப்ரவேசிக்கப்போகிறார்.

ஸர்வதோ தாவலோக்ய--சுற்றிலுமெங்கும் த்ருஷ்டியைச் செலுத்தி, அஹோ நு கல்வயம் விஷக்வகாஶமாவிஶதி விஸ்மயம்--இதென்ன விந்தை! எங்கும் ஒரே ஜ்யோதியாக ஜ்வலிக்கிறதே. இதனால், தயாதேவியின் வல்லபரான பகவானுடைய மோக்ஷணஸங்கல்பர் என்பவர் எழுந்தருளுகிறார்போலும்.

இந்த நிர்வஹணஸந்தியில் இது 'பர்யுபாஸநம்' என்னுமங்கமென்று ப்ரபாவிலாஸம். 'பர்யுபாஸநம் வ்ருத்தாவநயம்' என்று அதன் லக்ஷணம். கருடரின் உபாஸநம், கருடரின் ப்ரஸாதம், பகவானுடைய ப்ரஸாதமான ஸங்கல்பரின் உதயம், ப்ரவேசம், இந்த ஸந்திகளும் அங்கங்களும் அத்யாத்மநாடகத்திற்கே மிக்கப்பொருத்தமானவை.

(ஸங்கல்பரெனும் பாத்ரம் ப்ரவேசிக்கிறார்)

ஸங்கல்பர்-(தன்னையே பார்த்துக்கொண்டு)

(பிறக்கையிலேயே ஸ்வயம்ப்ரகாசமாகப் பிறக்கிறவர் இவர். ஸர்தர்சநரெனும் தேவரூபர். கோடிஸூர்யஸமப்ரபர். தன் ஸ்வரூபத்தைத் தானே வர்ணிக்கிறார். இவருடைய உதயத்தை இந்த நாடகம் கோடித்தது. இப்பொழுது பலோதயமாகிறது.)

யஸ்மிந் [illegible] நீயஸ [illegible]
சைதந்யா விஶ்வஸ்ய விதாவிதஸ்ய
ஜகத்ஸர்க்கப்ரபஞ்சோதய: | [illegible]
[illegible]
ஸந்தோஷ ஸந்தோஷ [illegible]
[illegible] ||

ப்ரபோதசந்த்ரோதயத்தில் ப்ரபோதசந்த்ரரெனும் பாத்ரம் முடிவான 6-வது அங்கத்தின் முடிவில் ப்ரவேசிக்கப்போகுமுன், உபநிஷத்தேவீ உண்மைஜ்ஞாநமான சுத்தாத்மஸ்வரூபனான புருஷனை வர்ணிக்கிறாள்.

'யஸ்மாத் விஶ்வமுதேதி யத்ர ரமதே யஸ்மிந் புந-
ர்லீயதே பாஸா யஸ்ய ஜகத்விபாதி ஸஹ
ஜாநந்தோஜ்ஜ்வலம் யந்மஹ: | ஶாந்தம் ஶாஶ்வத
மக்ரியம் யமபுநர்பாவாய பூதேஶ்வரம்
த்வைதத்வாந்தமபாஸ்ய யாந்தி க்ருதிந:
ப்ரஸ்தௌமி தம் பூருஷம் ||'

என்ற ச்லோகத்தில், புருஷனெனுமாத்மாவே உலகஸ்ருஷ்டிஸ்திதிலயங்களுக்கு (அஜ்ஞாநத்தினாலே) காரணமென்றும், ஸ்வரூபஜ்ஞாநத்தால் அஜ்ஞாநம் நீங்கி அவன் ஸ்வரூபமே ஸ்வாபாவிகஸஹஜாநந்தத்தோடு உஜ்வலமாய் ப்ரகாசிக்கிறதென்றும் வர்ணித்தாள். பிறகு முடிவில் ப்ரபோதோதயனான சந்த்ரன் ப்ரவேசிக்கையில்—

'கிம் வ்ருத்தம் கிமபோஹிதம் கிமுதிதம்
கிம்வாஸ்தமாஸாதிதம் வ்யக்தம் கிம் நு
விலாயிதம் நு கிமிதம் கிஞ்சிந்நவா கிஞ்சந |
யஸ்மிந் த்ருஷ்டிபதே விதகலத்வைதம் ததேவம்
ஸதோ ராஹதி த்ரைலோக்யம் ஸஹஜ
ப்ரகாஶமஸிதம் ஸோऽஹம் ப்ரபோதோ
தய: ||'

என்று ப்ரபோதனாலேயே பாடப்பட்டது. இத்தனைநாளாய் அநாதிகாலமாய் உலகமிருந்து வந்த அநுபவங்களெல்லாம் இருந்த இடம் தெரியாமல் ஓடிப்போகும் க்ஷணம். 'ஸவித்யா ஸஹகாயேந நாஸீதஸ்தி பவிஷ்யதி' அத்விதீயப்ரஹ்மாத்மஸாக்ஷாத்காரம் வருகையில் இதற்குமுன் ஆட்டம்போட்டுவந்து கூத்தடித்த அநாதியான அவித்யையும், அதன் விளைவான ப்ரபஞ்சமும் முன் இருந்ததேயில்லை, இப்பொழுதும் இல்லை, இனி இருக்கப்போவதுமில்லை. தன்னுடைய நித்யமுக்த ப்ராஹ்மத்தன்மை அஜ்ஞாநநாசத்தால்உள்ளபடி ப்ரகாசிக்கும் க்ஷணத்திலேயே மாயாப்ரபஞ்சமஸ்தமிக்கிறது. என்ன வந்தது? ஒன்றும் புதிதாய் வரவில்லை. என்றைக்குமிருந்த ஆநந்தசித்ஸ்வரூபமிப்பொழுது மறைவன்னியில் ஜ்வலிக்கிறது; அவ்வளவுதான், புதிதாய் ஒன்றும் வரவில்லை. கிம் அபோஹிதம்-என்ன போயிற்று? அஜ்ஞாநம் போயிற்று. அஜ்ஞாநம் இருந்ததோ? நாஸீத்-இருக்கவேயில்லை. இருந்ததொன்றும் போகவில்லை. கிம் உதிதம்-என்ன உதித்தது? இந்த நாடகம், ஏதோ ப்ரபோதசந்த்ரனுதிப்பதைப் பற்றியென்று பெயரிட்டிருந்தது. உண்மையில் ஒன்றும் புதிதாக உதிக்கவில்லை. கிம்வாஸ்தமாஸாதிதம்—ஏதோ ஸம்ஸாரராத்ரி நீங்கப்போகிறது என்று சொன்னார்களே ராத்ரி இருந்தாலல்லவோ நீங்கப்படுவதற்கு. வ்யக்தம் கிம் நு—முன் ஏதோ ஆத்மஸ்வரூபத்தைக் காட்டிலும் வெளிப்பட்டதுபோலிருந்தது. போட்டுத்தைத்து ஸ்வரூபத்தோடு ஒன்றுகூட்டிக்கலந்து உள்ளே முழுகிப்போயிற்றோ. விலாயிதம் நு—லயித்து அதர்சநத்தையடைந்துவிட்டதோ? கிமிதம் கிஞ்சிந—இருந்து ஓடிப்போனது ஏதாவது இருந்த பொருளா? நவா கிஞ்சந—அல்லது ஒன்றுமில்லாததுதானா? யஸ்மிந் த்ருஷ்டிபதே—எந்த 'ப்ரபோதம்' என்னும் ஜ்ஞாநம் நன்றாயுதித்து வ்யக்தமாகும்பொழுது, த்ரைலோக்யம்—மூன்று உலகங்களாகிய ப்ரபஞ்சம்,

(தொடரும்)

ஸ்ரீ:

(பெரிய திருமொழி)

‘அங்கண் ஞாலமஞ்ச’

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

[பதவுரை] மென்றபேழ்வாய்-(சீற்றத்தால்)மடித்துக்கொண்டுள்ள பெரியவாயையும். வாள் எயிறு ஓர் கோளரியாய்-ஒள்ளிய பற்களையும் ஒப்பற்ற மிடுக்கையுமுடைய நரசிங்கமாய், பொன்ற-(அவ்வடிவைக்கண்டபோதே) ம்ருதப்ராயனான, அவுணன் ஆகம்-ஹிரண்யாஸுரனது உடலை, வள் உகிரால் போழ்ந்த-கூரிய நகங்களால் பிளவுபடுத்தின, புனிதன் இடம்-பரிசுத்தமூர்த்தியான பகவான் (எழுந்தருளியிருக்கும்) இடம் யாதெனில்:-நின்ற செந்தீ-(அங்கு எப்போதும்) நிலையாயிருந்துள்ள சிவந்த அக்நியை, சூறை-சுழல் காற்றானது, மொண்டு-முகந்து தள்ளிக்கொண்டு, நீள்விசும்பு ஊடு-பரந்த ஆகாயத்தினிடத்தில், இரிய-சிதறஅடிக்க, (அதனால்) சென்றுகாண்டற்கு அரிய கோயில்-அருகிற்சென்று பார்ப்பதற்கும் அரிதாயிருக்கும் கோயிலையுடைய, சிங்கவேள் குன்றம்.

[தெளிவுரை] சீற்றத்தாலே மடித்த வாயையும், ஒள்ளிய பற்களையுமுடைய நரசிங்கமாய், அவனது திருவுருவத்தைக் கண்டபோதே ம்ருதப்ராயனாய்ப்போன ஹிரண்யாஸுரனது உடலைக் கூரிய திருவுகிர்களால் கிழித்தெறிந்த பரிசுத்தமூர்த்தியான எம்பெருமான் எழுந்தருளியிருக்கும் இடம் யாதெனில்:-காட்டில் நிலைபெற்றுக் கிடக்கும் சுழற்காற்றானது பரந்த ஆகாசத்தில் சிதற அடித்ததால், அந்த வெம்மையின் கனத்தால் அணுகிச் சேவிக்கவும் அரிதாயிருக்கிற கோயிலையுடைய சிங்கவேள்குன்றமாம்.

மென்ற பேழ்வாய்—சீற்றத்தாலே மடித்தவாய்; ‘உயிருடை மேருவென்ற வாய் மடித்துருத்துநின்றான்’ என்பர் கம்பர்.

அவுணன் பொன்ற ஆகம்—ஸ்ரீசக்ரவர்த்தித் திருமகன் விற்பிடித்தவளவிலே அரக்கர் பலர் மண்ணுண்டதுபோல், ஸ்ரீந்ருஸிம்ஹன் தூணினின்றும் தோன்றிய போதே ஹிரண்யன் பீதியினால் ம்ருதப்ராயனானான் என்றபடி. (பொன்ற—இறந்த)

நின்ற செந்தீ........அரிய கோயில்—காட்டில் நிலையாய்க் காணப்படும் தீயைச் சுழற்காற்றானது ஆகாசத்தில் சிதற அடிக்க, அதனால் ஆகாயம் முற்றும் எறிவதனால், அக்கோயில் ஒருவரும் எளிதிற் சென்று காண்டற்கு அரிதாயிருக்கிறதென்றபடி.

சென்று காண்டற்கரிய கோயில்—‘இப்படியிருக்கையாலே ஒருவர்க்கும் சென்று காண்கைக்கு அரிதாயிருக்குமதாயிற்று. பரமபதத்தோபாதி இந்நிலத்துக்கும் நாம் பயப்படவேண்டாவென்று ஹ்ருஷ்டராகிறார்’ என்கிற வ்யாக்யானவாக்யம் இங்குக்காணத்தக்கது.

6 எரிந்தபைங்க ணிலங்குபேழ்வா யெயிற்றொடி தெவ்வுருவென்(று)
இரிந்துவானோர் கலங்கியோட விருந்தவம் மானதிடம்
நெரிந்தவேயின் முழையுணின்று நீணெறிவா யுழுவை
திரிந்தவானைச் சுவடுபார்க்கும் சிங்கவேள் குன்றமே.

[பதவுரை] எரிந்த—சீற்றத்தாலே எரிந்துகொண்டிருக்கிற, பைங்கண்—பசுமையான கண்களையும், இலங்குபேழ்வாய்—விளங்குகின்ற பெரியவாயினுள், எயிற்றொடு—பற்களையுமுடைய, (திருவடிவைக்கண்டு) 'இது எவ்வுரு' என்று—'இது என்ன பயங்கரமான உருவ'மென்று பயந்து, வானோர்—தேவர்கள், இரிந்து கலங்கி ஓட—சிதறி மனக்கலக்கங்கொண்டு ஓடும்படி, இருந்த—எழுந்தருளியிருந்த, அம்மானது இடம்—ஸர்வஸ்வாமியானவன் எழுந்தருளியிருக்கும் இடம் யாதெனில்:—நெரிந்த—ஒன்றோடொன்று நெருங்கியுள்ள, வேயின்—மூங்கில்களின், முழையுள் நின்று—புதர்களினின்றும், உழுவை—புலிகள், நீள் நெறிவாய்—பெரிய (காட்டு) வழியில் வந்து, திரிந்த—(காட்டில்) திரிந்து சென்ற, ஆனை சுவடு—யானைகள் போன அடையாளத்தை, பார்க்கும்—(மோப்பத்தினால் ஆராய்ந்து) பார்க்கிற, சிங்கவேள் குன்றமே—

[தெளிவுரை] கோபத்தீயையுடைய பசிய கண்களையும், பெரிய வாயையும், நீண்ட பற்களையுமுடைய வடிவத்தைக் கண்டு 'இதென்ன பயங்கரமான திருவடிவம்!' என்று தேவர்களும் அஞ்சி ஓடப்பெற்ற எம்பெருமான் எழுந்தருளியிருக்கும் இடம் யாதெனில்:—நெருங்கிய மூங்கிலின் புதர்களினூடே புலிகள், பெரிய காட்டுவழியில் வந்து, அங்கு யானைகள் நடமாடிச்சென்ற அடையாளத்தை மோப்பத்தினால் கண்டறியக்கூடிய சிங்கவேள்குன்றமென்னும் திருப்பதியாம்.

வானோர் இரிந்து கலங்கி ஓட—அங்கண் ஞால மஞ்சின தன்றிக்கே, தேவர்களும் 'இஃதென்ன பயங்கர வடிவம்!' என்று அஞ்சி ஓடும்படியான திருவடிவம் வாய்ந்தவன் நரசிங்கன் என்றபடி.

நெரிந்த......பார்க்கும்—நெருக்கமாய் வளர்ந்துள்ள மூங்கிற்புதற்களினின்றும் புலிகள் வெளியில் வந்து, யானையின் மத்தகத்தைப் பிளந்து அதன் உதிரத்தைக் குடிக்கும்பொருட்டு மோப்பத்தினால் அதன் அடிச்சுவட்டைப் பின்பற்றிச்செல்லுமென்க.

7 முனைத்தசீற்றம் விண்சுடப்போய் மூவுலகும் பிறவும்
அனைத்துமஞ்ச வாளரியா யிருந்தவம் மானதிடம்
கனைத்ததீயும் கல்லுமல்லா வில்லுடை வேடருமாய்
தினைத்தனையும் செல்லவொண்ணாச் சிங்கவேள் குன்றமே.

[பதவுரை] முனைத்த சீற்றம்—மிகுந்த கோபமானது, விண் போய் சுட—ஆகாயமளவும் சென்று அதனைச்சுட, மூ உலகும்—(ஸ்வர்க்கம் மத்யம் பாதாளம் என்னும்) மூன்று உலகத்திலுள்ளாரும், பிறவும் அனைத்தும்—மற்றும் ப்ரஹ்மாதிலோகங்களில் உள்ளவர் யாவரும், அஞ்ச—பயப்படும்படி, ஆள் அரியாய் இருந்த—நரசிங்கரூபியாய் எழுந்தருளியிருக்கிற, அம்மானது இடம்—ஸர்வஸ்வாமியானவன் எழுந்தருளியிருக்கிற இடம் யாதெனில்:—கனைத்த தீயும்—(எரியும்போது) ஒலிக்கின்ற நெருப்பும், கல்லும்—(அத்தீயாலே வேகிற) கற்களும், அல்லா—(இவைகள் காணப்படுவன) தவிர, வில் உடை—வில்லை ஏந்திய, வேடருமாய்—வேடர்களையும் உடையதாய், தினைத்தனையும் செல்ல ஒண்ணா—(ஆச்ரிதரல்லாதார்) சிறிதும் அணுகமுடியாத, சிங்கவேள்குன்றம்—

[தெளிவுரை] மிகுந்த கோபமானது ஆகாயமளவும் சென்று சுட்டெரிக்கவும், மூவுலகத்தினரும் இவரல்லாத ப்ரஹ்மாதிலோகத்தினரும் அஞ்சும்படி ஸ்ரீ ந்ருஸிம்ஹரூபியான

பகவான் எழுந்தருளியிருக்குமிடம் யாதெனில்:—ஶப்தத்தோடுகூடிய அக்நியையும், அதில் வேகிற கற்களையும், இவற்றினும் கொடிய வில்லேந்திய வேடர்களையும் உடையதாய் அநாச்ரிதர் கிஞ்சித்தும் செல்லமுடியாத சிங்கவேள்குன்றமென்னும் திருப்பதியாம்.

முனைத்த...... அஞ்ச—ஸ்ரீந்ருஸிம்ஹனுடைய கோபாக்நி மூவுலகங்களையும் மற்றும் பிற லோகங்களையும் சுட்டெரித்ததென்று சீற்றத்தின் எல்லை சொன்னபடி.

ஸ்ரீசக்ரவர்த்தித் திருமகன் கடலரசன்மேற் கோபங்கொண்டபோது. அவனது கோபம் ப்ரஹ்மலோகத்தளவும் சென்று எட்டியதென்பது,

'அண்டமூலத்துக் கப்பா லாழியுங் கொதித்த தேழு
தெண்டிரைக் கடலின் செய்கை செப்பியென்? தேவன் சென்னி
பண்டைநா ளிருந்த கங்கை நங்கையும் பதைத்தாள்; பார்ப்பான்
குண்டிகை யிருந்த நீருங் குளு குளு கொதித்ததன்றே.'

[கம். ராம. உயுத்தகாண்டம்—வருணனை வழிவேண்டு படலம்—11]

என்று கம்பரால் வர்ணிக்கப்பட்டிருப்பது இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

தினை யென்பது ஒரு சிறிய தாந்யம். அது ஒரு சிறிய அளவைக் காட்டும் சொல்லாக வழங்கப்படும்; எள்ளளவு என்பதுபோல.

ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகன் பிராட்டியோடும் இளையபெருமாளோடும் எழுந்தருளின வனத்தின் கடுமை

'கன்னிரைந்து தீய்ந்து கழையுடைந்து கால்சுழன்று
பின்னும் திரைவயிற்றுப் பேயே திரிந்துலவாக்
கன்னவிலும் வெங்கானத்தூடு' [பெரிய திருமடல்]

என்று இவ்வாழ்வாரால் வருணிக்கப்பட்டிருப்பது, இப்பாசுரத்தின் பின்னிரண்டடிகளைப் படிக்கும்போது நம் நினைவிற்கு வருகிறது.

8 நாத்தழும்ப நான்முகனு மீசனுமாய் முறையால்
ஏத்தவங்கோ ராளரியா யிருந்தவம் மானதிடம்
காய்த்தவாகை நெற்றொலிப்பக் கல்லதர் வேய்ங்கழைபோய்
தேய்த்ததீயால் விண்சிவக்கும் சிங்கவேள் குன்றமே.

[பதவுரை] நான்முகனும் ஈசனுமாய்—பிரமதேவனும் ருத்ரனும், முறையால்—க்ரமப்படி, நாத்தழும்ப ஏத்த—நாத்தடிக்கும்படி ஸ்தோத்ரம் செய்ய, அங்கு—அவ்விடத்தில், ஓர் ஆள் அரியாய்—ஒப்பற்ற நரசிங்கமாய், இருந்த அம்மானது இடம்—எழுந்தருளியிருந்த ஸர்வஸ்வாமியான ஸர்வேச்வரன் வர்த்திக்கிற இடம் யாதெனில்:—காய்த்த வாகை—காய்கள் நிறைந்த வாகைமரங்களின், நெற்று ஒலிப்ப—நெற்றுக்கள் ஒலி செய்யவும், கல் அதர்—கல் நிறைந்த வழியில் (உண்டான), வேய்ங்கழைகள்—மூங்கிற் கழிகள், போய்—ஆகாயத்தை அளாவ ஓங்கி, தேய்த்த தீயால்—(அவை ஒன்றோடொன்று உராய்தலினால் உண்டான) தீயினால், விண் சிவக்கும்—ஆகாசம் சிவந்திருக்கப்பெற்ற, சிங்கவேள் குன்றம்—

[தெளிவுரை] ப்ரஹ்மதேவனும் ருத்ரமூர்த்தியும் மிகுதியாக ஸ்தோத்ரம் செய்ய, அவ்விடத்தில் பெருமிடுக்குடன் நரசிங்கரூபியாய் எழுந்தருளியிருக்கும் இடம் யாதெனில்

காய்கள் நிறைந்த காட்டுவாகைமரங்களின் நெற்றுக்கள் ஒலிக்கவும், கற்கள் நிறைந்த காட்டு வழியில் முளைத்த மூங்கிற்கழிகள் ஒன்றோடொன்று உரய்தலால் தீ உண்டாகி ஆகாசத்தை வ்யாபித்தலால் ஆகாசமெங்கும் சிவந்து காணப்படும் சிங்கவேள்குன்றமென்னும் தலமாம்.

நாத்தழும்ப நான்முகனுமீசனுமாய் முறையால் ஏத்த—என்பதற்கு 'பகவான் சேஷி, நாம் சேஷர்கள்' என்ற க்ரமத்தில் ஸ்தோத்ரம் செய்ய என்றும், இருவரும் மாறிமாறித் துதிக்கவென்றும் பொருள்.

நாத்தழும்ப—நாக்கு தடிப்பேறும்படி; இதனால் ப்ரஹ்மருத்ரர்கள் அநவரதமும் ஸ்ரீ ந்ருஸிம்ஹனை ஸ்தோத்ரம் பண்ணிக்கொண்டிருந்தமை விளங்கும். 'நாத்தழும்பெழ நாரணாவென்று மெய்தழும்பத் தொழுதேத்தி' என்ற பெரியார் பாசுரம் காணத்தக்கது.

நெற்று—உலர்ந்த பழம். [தேங்காய் நெற்று—உலர்ந்த தெங்கம்பழம்.]

9 நல்லை நெஞ்சே! நாம் தொழுதும் நம்முடை நம்பெருமான்
அல்லிமாதர் புல்கநின்ற வாயிரந் தோளனிடம்
நெல்லிமல்கிக் கல்லுடைப்பப் புல்லிலையார்த் ததர்வாய்ச்
சில்லிசில்லென் றொல்லறாத சிங்கவேள் குன்றமே.

[பதவுரை] நெஞ்சே—மனமே! நல்லை—நீ நல்லவனாயிருக்கிறாய்; நம்முடை நம்பெருமான்—(நாம் ஆச்ரயிக்கத் தகுந்த) ஸ்வாமியும், அல்லிமாதர் புல்கநின்ற—தாமரைப்பூவை இடமாகக்கொண்ட பெரியபிராட்டியாரை அணைத்துக்கொண்டு எழுந்தருளியிருக்கிற, ஆயிரம் தோளன் இடம்—ஆயிரம் திருத்தோள்களையுடைய எம்பெருமான் எழுந்தருளியிருக்கும் இடம் யாதெனில்:—நெல்லிமல்கி—நெல்லிமரங்கள் நிறைந்து, கல் உடைப்ப—(அவற்றின் வேர்கள் இறங்கிக்) கற்பாறைகளை உடைக்கவும், புல் இலை—பனையோலைகள், ஆர்த்து—சலசல வென்று ஆரவாரம் செய்யவும், அதர்வாய்—வழியில், சில்லி—சுவர்க்கோழிகளின், சில் என்று ஒல் அறாத—'சில் சில்' என்று ஓசை மாறாத, சிங்கவேள்குன்றம்.—நாம் தொழுதும்—(அங்கே சென்று அவனை) வணங்கி உஜ்ஜீவிப்போம்.

[தெளிவுரை] நாம் ஆச்ரயிக்கத்தகுந்த ஸ்வாமியும், திருமகளாரைத் தழுவிக் கொண்டு எழுந்தருளியிருக்கிற ஸஹஸ்ரபாஹுவுமான ஸர்வேச்வரன் எழுந்தருளியிருக்குமிடம் யாதெனில்:—நெல்லிமரங்கள் வேரோடி, அதனால் உடைபட்ட கற்பாறைகளையுடையதும் பனையோலைகள் சலசலவென்று எப்போதும் ஒலிக்கப்பெற்றதுமான சிங்கவேழ்குன்றமென்னும் திருப்பதியாம்.

நம்முடை நம்பெருமான்—'நித்யஸூரிகளுக்கு அநுபாவ்யன்போல் நமக்கும் ஆச்ரயணீயன்' என்றபடி.

அல்லிமாதர் புல்கநின்ற ஆயிரந்தோளன்—என்பதால் நான்முகனும் ஈசனும் ஏத்தியும் அவன் சீற்றம் மாறாததால், பெரியபிராட்டி ஸம்ச்லேஷித்து அவன் சீற்றத்தை மாற்றினாள் என்ற குறிப்புத்தோன்றும். 'இவள் அணைத்தால் இவளைக் கட்டிக் கொள்ள ஆயிரம் தோள்கள் உண்டாமாயிற்று' என்பது வ்யாக்யான வாக்யம்.

ஆயிரம் தோளன்:—'ஸஹஸ்ரசீர்ஷா புருஷ: ஸஹஸ்ராக்ஷ: ஸஹஸ்ர பாத்' 'காலாயிரம் முடியாயிரங் கைப்பற்றி'—என்பன காண்க.

சில்லி–சுவர்க்கோழி, *ஜில்லிகாவென்னும் வடசொல் திரிபு.

நல்லை–நீ நல்லவனுயிருக்கிறுய்; முன்னிலை ஒருமைக் குறிப்பு வினைமுற்று.

தொழுதும்–தொழுவோம்; தன்மை பன்மை எதிர்கால வினைமுற்று.

10 செங்கணாளி யிட்டிறைஞ்சும் சிங்கவேள் குன்றுடைய
எங்களீச னெம்பிரானை யிருந்தமிழ் நூற்புலவன்
மங்கையாளன் மன்னுதொல்சீர் வண்டறை தார்க்கலியன்
செங்கையாளன் செஞ்சொல்மாலை வல்லவர் தீதிலரே.

[பதவுரை] செங்கண் ஆளி–சிவந்த கண்களையுடைய ஸிம்ஹங்கள், இட்டு–(ஆனைக் கொம்பு முதலிய காணிக்கைப் பொருள்களை) ஸமர்ப்பித்து, இறைஞ்சும்–வணங்குகின்ற, சிங்கவேள் குன்றுடைய–சிங்கவேள்குன்றத்தை இருப்பிடமாகவுடைய, எங்கள் ஈசன்–(ஸம்ஸாரிகளான) நம்போல்வார்க்கும் ஸ்வாமியாய், எம்பிரானை–ஸர்வோபகாரகனான ஸ்ரீ அஹோபிலேசன் விஷயமாக, இரு தமிழ்நூல்புலவன்–பெரிய தமிழ் நூலில் மிக்க புலமை கொண்டுள்ளவரும், மங்கையாளன்–திருமங்கை நாட்டுக்கு நிர்வாஹகராயும், மன்னு தொல் சீர்–நிலைபெற்ற பெருஞ் சிறப்பையுமுடைய, வண்டு அறை–வண்டுகள் ஒலிக்கின்ற, தார்–மாலையை அணிந்த, கலியன்–கலியன் என்னும் திருநாமமுடைய ஆழ்வார் அருளிச் செய்த, செம் சொல்மாலை–அழகிய சொற்களாலாகிய பாமாலையை, வல்லவர்–ஓதுமவர்கள், தீது இலர்–தீமையில்லாதவராவர்.

[தெளிவுரை] சிவந்தகண்களையுடைய ஸிம்ஹங்கள், ஆனைக்கொம்பு முதலியவற்றைக் காணிக்கையாக ஸமர்ப்பித்துத் திருவடிகளில் வணங்கப்பெற்ற ஆச்ரிதஸுலபனான ஸ்ரீ ந்ருஸிம்ஹன் விஷயமாக, தமிழ் நூலில் புலமைகொண்டுள்ள ஸ்ரீ திருமங்கையாழ்வார் அருளிச்செய்த இப்பாமாலையை ஓதுமவர்கள் தீதின்றி வாழ்வார்கள்.

எங்கள் ஈசன் எம்பிரான்–என்னும் தொடர், 'ஸம்ஸாரி சேதநரும் அருகிற் சென்று ஆச்ரயிக்கலாம்படியிருக்கிற ஸர்வஸுலபனான ஸ்வாமி' என்பதைத் தெரிவிக்கும்.

மன்னுதொல் சீர்க்கலியன்–'லக்ஷ்மணோ லக்ஷ்மிஸம்பந்ந:' என்றபடி நிலைத்த பாரதந்த்ர்யத்தோடு கூடிய ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீயை உடையவர் ஆழ்வாரென்க.

செங்கையாளன்–'ஈந்து சிவந்தது ......இரு கரமே' என்றபடி மஹோதாரரா யிருக்குமவர்.

தீதிலர்–ஸ்ரீ ந்ருஸிம்ஹன் தன் விரோதியைப் போக்கி ஜகத்ரக்ஷணம் செய்தது போல், இப்பதிகத்தைப் பயில்பவர் பாவம் நீங்கிச் சுத்திபெறுவர் என்று பலச்ருதி ஸாதித்தபடி.

ஏழாந் திருமொழி முற்றுப்பெற்றது.

ஸ்ரீ:

சென்று காண்டற்கரிய கோயில்

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

இந்த சித்ரங்களனைத்தும் ஒரே கல்லாலான கம்பத்திலேயே செதுக்கப்பட்டிருப்பது ஆச்சர்யமானது. இங்கு ஒன்றையொன்று எதிர்நோக்கியுள்ள விஜயநகரத்து ராஜாக்களுடைய பிம்பங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. யாழ் குழல், மத்தளம். வீணை, முதலிய வாத்யங்களை வாசிக்கும் பாவத்துடன் சில பிம்பங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. இவைகள்போலவே வலதுபாகத்திலும் ஸ்ரீரங்காதி க்ஷேத்ரங்களைப் போன்ற கோபுரங்களும் விமானங்களும் கம்பங்களில் சித்தரிக்கப்பட்டிருக்கின்றன. அக்கம்பங்களில் யாளிமீதும் யானைமீதும் வீற்றிருக்கும் வீரர்களது பிம்பங்களுள்ளன. பக்திபரவசர்களான பாகவதோத்தமஸ்த்ரீகள்பலர் வாத்யங்களுடன் பகவானை வணங்குவதாகச் சித்ரங்கள் திகழ்கின்றன. யோகிகள் சிலர் யோகம்செய்துகொண்டு த்யாநநிஷ்டர்களாக இருப்பதாகவும் சித்தரிக்கப்பட்டுள்ளது. இங்குள்ள நடுவிலிருக்கும் நாலுகால்மண்டபத்தைச் சுற்றிலும் திவ்யாபரணபூஷிதராயும், கோதண்டமண்டிதஹஸ்தராயுமுள்ள ரகுவீரனும், அவரைச்சுற்றி லக்ஷ்மணபரதசத்ருக்னர்களும், கிளிக்குப் பழம் கொடுத்துக்கொண்டிருக்கும் ஸீதாப்பிராட்டியும், பக்திபரவசராய், ஆடையாபரணங்களால் நன்கு அலங்க்ருதரான சிறிய திருவடியும் அவருக்கு அடுத்தபடியாக ஸுக்ரீவமஹாராஜநும் மிகவும் அழகாக விளங்குகின்றனர். இங்கு சில கம்பங்கள் பின்னமாகிவிட்டன. இம்மாபெரும் மண்டபத்தில் ஓர் அங்குலம்கூட சித்திரவேலை இல்லாத இடமே கிடையாது. இம்மண்டபத்தையும் இதிலுள்ள சித்ரவேலைகளையும் பார்த்து ஒவ்வோர் யாத்ரீகரும் மெய்மறந்துவிடுகின்றனர். இங்கு அடியேன் தங்கியிருந்த 10 நாட்களிலும் சுற்றிச்சுற்றி இச்சித்ரங்களைப்பார்த்தும் அடியேனது ஸுஹ்ருத்துக்களுக்குக் காட்டியும் ஆநந்தமடைந்தேன். பெருமாள் ஸந்நிதிக்கு வடக்கில் அம்ருதவல்லித்தாயார் ஸந்நிதி இருக்கிறது. ப்ரஹ்லாதனைக் கீழே உருட்டித்தள்ளியபோது அடிபடாமல் தாங்கி ரக்ஷித்ததாக தாயாருக்கு மாஹாத்ம்யம். இங்கும் முன்பு விசாலமான மண்டபமுள்ளது.

இந்த மண்டபத்தைக் கட்டிய சிற்பியேதான் காஞ்சீபுரம் தேவப்பெருமாள் ஸந்நிதியிலுள்ள நூற்றுக்கால் மண்டபத்தையும் கட்டியவர். அங்கும் இங்குள்ளதுபோல் ஓர் கம்பத்தில் ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹனும் ஸ்ரீ ஆதிவண்சடகோப யதீந்த்ரமஹாதேசிகனும் எழுந்தருளியிருக்கின்றனர். இந்த மண்டபமானது ஸுமார் 30 வருஷங்களுக்கு முன்பு நடுவில் மாத்திரம் மூடப்பெற்று மீதியிடமெல்லாம் கம்பங்கள் மாத்திரம் நிலைநாட்டப்பெற்றிருந்தன. அப்போது ஸ்ரீ அஹோபிலமடம் 41வது பட்டம் ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹசடகோப யதீந்த்ரமஹாதேசிகன் வடதேசத்தில் பெரிய பாங்கரான மங்நீராம்ஷேட் என்னும் தநிகரான தம் சிஷ்யருக்கு ஜீர்ணோத்தாரணத்தை செய்ய நியமித்தார். அந்த பக்தரும் அநேக ஆயிரரூபாய் சிலவுசெய்து மிகவும் சீரிய முறையில் கட்டிமுடித்திருக்கிறார். இதுவிஷயமாய் அங்கு சிலாசாஸநமுள்ளது.

கல்யாணமண்டபம்

இது முதல்ப்ராகாரத்தின் தெற்குபாகத்தில் மேற்கே அமைந்துள்ளது. 64 கம்பங்களுள்ளது. மிக விசாலமாக அழகிய சித்ரங்களுடன் கூடியிருக்கிறது. பத்மாவதிதேவிக்கும் ஸ்ரீநிவாஸனுக்கும் விவாஹம் நடைபெறவேண்டியபோது பிராட்டி பகவதாராதநபூர்வகமாகத் ததீயாராதநம்செய்து தன்னைப் பாணிக்ரஹணம் பண்ணிக்கொள்ளும்படி பகவானிடம் சொல்ல, ஸ்ரீநிவாஸனும் ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹனை எழுந்தருளப்பண்ணி ஆராதித்து ததீயாராதநம்செய்து பாணிக்ரஹணம் செய்துகொண்டதாக ஸ்ரீ வேங்கடாசல மஹாத்ம்யம் என்னும் திருப்பதிஸ்தலபுராணத்திலுள்ளது. அதற்கடையாளமாக இம்மண்டபத்தில் ஸ்ரீநிவாஸன் எழுந்தருளியிருக்கிறார். இம்மண்டபத்தை கல்யாணமண்டபமென்கிறார்கள். இதில்தான் யாகசாலையுள்ளது. ப்ரஹ்மோத்ஸவம் பத்து திநங்களும் பெருமாள் இங்கேயே எழுந்

தருளியிருக்கிறார். வாஹநங்களில் இந்த மண்டபத்தில் அலங்காரமாகி இங்கிருந்தே புறப்பாடு நடைபெறுகிறது.

சக்ரவர்த்தித் திருமகனால் ஆராதிக்கப் பெற்றதால் ஸ்ரீரங்கநாதனுக்குப் 'பெரியபெருமாள்' என்று பெயர் வழங்கிவருகிறது. ஸ்ரீ அஹோபிலந்ருஸிம்ஹனை கலியுகவரதனை ஸ்ரீநிவாஸன் ஆராதித்துள்ளார். ஸ்ரீசக்ரவர்த்தித் திருமகனும் '𑌅𑌹𑍋𑌬𑌿𑌲𑌂 𑌨𑌾𑌰𑌸𑌿𑌂𑌹𑌂 𑌗𑌤𑍍𑌵𑌾 𑌰𑌾𑌮𑌃 𑌪𑍍𑌰𑌤𑌾𑌪𑌵𑌾𑌨𑍍' என்று ஆரம்பிக்கும் பஞ்சாம்ருதம் எனப்படும் ஐந்து ச்லோகங்களால் ஸ்தோத்ரம்பண்ணி ஆராதித்தபடியால் அவரைவிடப் பெரிய பெருமாள் இவர் என்று பெரியோர்கள் ரஸோக்தியாக ஸாதிப்பது உண்டு.

ஆழ்வார் ஆசார்யர்கள் ஸந்நிதிகள்

முதல் ப்ராகாரத்தின் வடமேற்கு மூலையில் ஸ்ரீ ஆதிவண்ஶடகோபயதீந்த்ரமஹாதேசிகன் ஸந்நிதியும், வடக்கில்ஆழ்வார்களின்ஸந்நிதியும், ஸ்ரீ நிகமாந்தமஹாதேசிகன் ஸந்நிதியுமிருக்கின்றன. அதற்குப் பக்கத்தில் நவநீதக்ருஷ்ணனும் கலியனும் எழுந்தருளியுள்ளனர். வடகிழக்கில் வாஹநமண்டமுள்ளது. இதில் ஸ்ரீசக்ரவர்த்தித்திருமகன் ஸந்நிதியும்ஸ்ரீபாஷ்யகாரர் ஸந்நிதியுமிருக்கின்றன. இங்கு ஏகாஸநத்தில் பிராட்டியும் ராமனும் எழுந்தருளியிருக்க பக்கலில் இளையபெருமாளும், திருவடியில் சிறிய திருவடியும் ஒரே விக்ரஹமாக அமைந்துள்ளனர். பாஷ்யகாரர் மிகவும் கம்பீரமாக எழுந்தருளியுள்ளார். இரண்டாவது ப்ராகாரத்தில் த்வஜஸ்தம்பமுள்ளது. இந்த ப்ராகாரத்தில் யாத்ரீகர்கள் தங்கும் மண்டபங்களும், தேவஸ்தான கைங்கர்யபரர்களுக்கு வீடுகளும் அமைந்திருக்கின்றன. இப் ப்ராகாரத்தைச் சுற்றி மதிள் சுவரிருக்கிறது. இப் ப்ராகாரத்திற்கு வெளியில் ஸந்நிதி வீதி சோபையுடன் தோன்றுகிறது. இருபுறமும் மண்டபங்களும் தர்மசத்ரங்களும் இருக்கின்றன. ஸந்நிதி வீதிக்குத் தெற்கில் அழகான படிக்கட்டுகளுடன் கூடிய ஆச்சர்யமான திருக்குளமும், குளத்தைச் சுற்றிலும் பெரிய மண்டபங்களும் இருக்கின்றன. வடக்கில் ப்ரகாரத்தைச் சேர்ந்தாற்போல் பெரிய தோட்டத்தின் நடுவில் ஸ்ரீ பாஷ்யகாரர் ஸந்நிதி விலக்ஷணமாக அமைந்திருக்கிறது. இப்பொழுது இங்கு பாஷ்யகாரர் எழுந்தருளியிருக்கவில்லை. இதுதவிர, த்வஜாரோஹண மண்டபம், ஊஞ்சல்மண்டபம், அலங்கார மண்டபம், ம்ருத்ஸங்க்ரஹண மண்டபம், கங்கைகொண்டான் மண்டபம் முதலிய அநேக மண்டபங்களும் இருக்கின்றன. ஸந்நிதிவீதியில் கிழக்குக்கோடியில் திருவடி கோயிலும் அதற்கு வடக்கில் ஓர் அழகிய புஷ்கரிணியுமிருக்கின்றன. இங்குள்ள ஒரு மண்டபத்திலாவது இழைப்புவேலை, சித்திரவேலையில்லாது ஒரு கல்கூட சேர்க்கப்படவில்லை.

கோவிலுக்கு மேற்கே 1 பர்லாங்கு தூரத்தில் 'விச்வேச்வரபாவி' என்கிற நடவாபியும்; ஆழ்வார் கோனேரி (ஆழ்வார் தீர்த்தம்) என்கிற ஒரு புண்யதீர்த்தமுமிருக்கிறது. இதன் கரையில் நம்மாழ்வார் ஸந்நிதியிருக்கிறது. இதில் பெருமாளுக்குத் தெப்போத்ஸவம் முன்பு நடைபெற்றதாகக் கூறப்படுகிறது. இத் தீர்த்தங்களில் எக்காலமும் ஜலம் வற்றுவதே கிடையாது. வரும் யாத்ரீகர்களுக்கு ஸ்நாநபாநாதிகளுக்கு இத்தீர்த்தங்கள் மிகப் பயன் படுகின்றன.

இந்த க்ஷேத்ரத்தில் பதின்மூன்று புண்ய தீர்த்தங்களிருப்பதாக பெரியோர் பணிப்பர்.

2. பார்க்கவ ந்ருஸிம்ஹன்

இவர் கீழ் அஹோபிலத்திலிருந்து வடகிழக்கில்ஒன்றரைமைல்தூரத்தில் எழுந்தருளியிருக்கிறார். பார்க்கவ தீர்த்தம் என்கிறது ஓர் ரமணீயமான ஸரஸ். அதற்குமேல் மலைமேல் பார்க்கவந்ருஸிம்ஹன் இருக்கிறார். ஹிரண்யனை மடியில்போட்டுக்கொண்டு ஸம்ஹரிக்கும் ஸேவை. நான்கு புஜங்களுடன் சங்கசக்ரத்துடனும் ஸேவைஸாதிக்கிறார். ப்ரஹ்லாதாழ்வான் பக்கத்தில் எழுந்தருளியிருக்கிறார். இங்கும் ப்ரபையில் தசாவதாரங்கள் சித்திரிக்கப் பட்டிருக்கின்றன. பக்கலில் ஸ்ரீ நிவாஸன் எழுந்தருளியிருக்கிறார். இங்கு அக்ஷயதீர்த்தம் என்று ஒரு புண்யதீர்த்தமிருக்கிறது. இந்த புண்யக்ஷேத்ரத்தைப்பற்றி புராணத்தில் கூறப்படுவதாவது:—

'பார்க்கவக்ஷேத்ரமென்று பெயருடைய ஒரு க்ஷேத்ரமிருக்கின்றது அது ஸ்வர்க்கத்தையும் மோக்ஷத்தையும் கொடுக்கக்கூடிய புண்யகரமான ஓர் ஸ்தலம். அங்கேதான் மூன்று லோகங்களையும் ரக்ஷிக்கிற அக்ஷயதீர்த்தமிருக்கிறது. அதின்கரையிலுள்ள மலையில் பகவான் ஸ்ரீ ந்ருஸிம்ஹன் ஸேவை ஸாதிக்கிறார்' என்று கூறப்படுகிறது. இங்கேயிருந்துதான் லக்ஷரூபாய் செலவுசெய்து 41-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரால் சிமெண்ட் குழாய்கள் மூலமாக ஜலம் கொண்டுவந்து கீழஹோபிலத்திற்குஜலவசதி செய்துவைக்கப்பட்டிருக்கிறது. இந்த வஸதியில்லாவிடில் உத்ஸவகாலத்தில் லக்ஷக்கணக்கான யாத்ரீகர்கள் கஷ்டப்படும்படி நேரிடும். இப்பொழுதுள்ள நம் பெரிய அழகிய சிங்கரும் மேலும் செலவுகள் செய்து இந்த தீர்த்த வஸதியை அதிகரித்திருப்பதால் ஏற்பட்டுள்ள சௌகர்யம் அளவற்றது. ஜனங்களின் கஷ்டத்தைப் போக்கிய இம்மஹான்களிடத்தில் உலகத்தோர் க்ருதஜ்ஞர்களாக இருக்கவேண்டியது கடமையாகும். இங்கு நாங்கள் சென்றபோது ஒரு மனிதர்கூட இல்லை. நிச்சப்தமாய் பயங்கரமாக இருந்தது. அப்போது புலிவேட்டைக்காக பரணைகட்டி ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. எங்களுக்கு எதிரில் வேட்டைக்காரர்கள் சென்றுகொண்டிருந்தனர்.

3. சத்ரவடந்ருஸிம்ஹன்

இவர் கீழ் அஹோபிலத்திலிருந்து தெற்கில் ஒன்றரை மைல் தூரத்திலெழுந்தருளியிருக்கிறார். இங்கு பகவான் இந்த்ரன் முதலான தேவதைகளால் நித்யம் ஸேவிக்கப்பட்டவராய்க் கொண்டு உட்கார்ந்த திருக்கோலத்துடன் ஒரு கையை இடுப்பில் வைத்துக்கொண்டு மற்ற கைகளில் சங்கசக்ரங்களுடனும் அபயமுத்ரையுடனும் எழுந்தருளி லோகத்தை அநுக்ரஹிக்கிறார். திருவடியில் பத்மமுள்ளது. இப்போது இங்கு பெருமாளைச்சுற்றிலும் புற்றுகள் மூடியிருக்கிறது எவ்வளவு ப்ரயத்நப்பட்டும் புற்றுகள் மறைவதில்லை, மற்றுள்ள எட்டுமூர்த்திகளுக்கும் இவ்வளவு ஸௌஷ்டவமும் காம்பீர்யமும் கிடையாது. இந்த பெருமாளைப்பற்றி புராணத்தில்—

'சத்ரவடக்ஷேத்ரம் இந்த்ரன் முதலியவர்களால் ஆச்ரயிக்கப்பட்டிருக்கிறது; இங்கு பகவான் கிழக்குதிக்கை அநுக்ரஹித்துக்கொண்டு ந்ருஸிம்ஹரூபியாய் எழுந்தருளியிருக்கிறார்' என்றுள்ளது.

4. யோகாநந்த ந்ருஸிம்ஹன்

இவர் சத்ரவடன் ஸந்நிதியிலிருந்து கிழக்கே அரைமைல்தூரத்திலிருக்கிறார். பகவான் இங்கு யோகபட்டத்துடனும், நான்குதிருக்கைகளுடனும் எழுந்தருளியுள்ளார். இருகைகளில் சங்கசக்ரங்கள்; இருகைகளால் முழங்காலைக் கட்டிக்கொண்டுள்ளார். ப்ரஹ்லாதனுக்கு யோகாப்யாஸவித்யை சிக்ஷை பண்ணிவைத்தபடியால் 'யோகாநந்தந்ருஸிம்ஹன்' என்று பெயர்ஏற்பட்டது. எதிரில் திரைசாத்தியிருக்கிறது. வடக்கே வாயிற்படி. இந்த இடத்தைப்பற்றி புராணத்தில், 'வேதாசலம் என்ற பர்வதத்திற்கு மேற்கு பாகத்தில் லக்ஷ்மீ இருக்கும் இடத்திற்கு ஸமீபத்தில் தென்திசையை நோக்கிக்கொண்டு பகவானை யோகாநந்த ந்ருஸிம்ஹன் மஹாத்மாவான ப்ரஹ்லாதனுக்கு யோகாப்யாஸத்தைச் செய்யக் கற்றுக்கொடுத்தார். அதுமுதல் லோகங்களில் அவரை யோகாநந்தர் என்றுசொல்லுகின்றனர்' என்று சொல்லப்பட்டிருக்கிறது.

5. காரஞ்ஜ ந்ருஸிம்ஹன்

இவர்கீழ்அஹோபிலத்திலிருந்து மேல்அஹோபிலத்திற்குச் செல்லும் ரோடில் 5-வது மைலில் கைகளில் சார்ங்க சக்ரத்துடனும் அபயஹஸ்தத்துடனும் எழுந்தருளியிருக்கிறார். புராணத்தில் இந்த க்ஷேத்ரத்தைப்பற்றிக் கூறுவதாவது—'பவநாசினிக் கரையில் காரஞ்ஜ வ்ருக்ஷத்தின் அடியில் எந்த பகவான் சார்ங்க சக்ரத்தோடும் ஸேவை ஸாதிக்கிறாரோ அந்த இடத்திற்கு காரஞ்ஜ க்ஷேத்ரம் என்று பெயர். எவர்களுக்கு ஸ்நாநத்திலும் ஜ்ஞாநத்திலும் இஷ்டமோ அவரவர்களுக்கு வேண்டிய பலத்தை ந்ருஸிம்ஹரூபியாய் அங்கு எழுந்தருளியிருக்கும் பகவான் அளிக்கிறான்' என்று சொல்லியிருக்கிறது.

இந்த ஸந்நிதியின் பக்கத்தில் சிறியதிருவடி அதிக கம்பீரமான திவ்யமங்களவிக்ரஹத்துடன் தனிக்கோவிலில் ஸேவைஸாதிக்கிறார்.

இவ்விடத்திலிருந்து கிழக்கே இரண்டுமைல் சென்றதும் 'பைரவகுண்ட'மெனப்படும் ஓர் தீர்த்தத்தைக் காண்கிறோம். இங்குதான் ஸ்ரீமதாதிவண்ஶடகோபயதீந்த்ர மஹாதேசிகன் அநுஷ்டாநம் செய்ததாகப் பெரியோர்கள் கூறுவர்கள். நடுவில் குளம் போன்றும் நான்கு பக்கங்களில் மண்டபங்களுடனும் இக்குண்டமுள்ளது. வடக்கே ஓர் மண்டபமும் அதில் ஸ்ரீ ந்ருஸிம்ஹனும் எழுந்தருளியுள்ளனர். இது தாண்டியதும் மலைமேல் ஏறினால் மேல் அஹோபிலத்தை யடைகிறோம். அங்கு யாத்ரீகர்கள் தங்க மூன்று பக்கங்களிலும் மண்டபங்களும் படிக்கட்டுகளுடன் கூடிய புஷ்கரிணியும் இருக்கிறது. இதையும் தாண்டி மேலே சென்றால் பெருமாள் உத்ஸவகாலங்களில் எழுந்தருளும் கங்கைகொண்டான் மண்டபமும் இன்னும் ஒரு மண்டபமுமிருக்கிறது. பிறகு மேற்கு கோபுரவாசல் தோன்றுகிறது. இங்கு ப்ராகாரமும் மதிளும் காண்கின்றன. ப்ராகாரத்தில் கல்யாணமண்டபமும், யாகசாலையுமுள்ளது. வாயிலில் இருக்கும் கம்பீரமான த்வாரபாலகர்களின் தோற்றம் அவச்யம் காணத்தக்கது. உள்ளே அர்த்தமண்டபமுள்ளது. இந்த இரண்டு குஹைகளுள்ளன.

6. அஹோபில ந்ருஸிம்ஹன்

ஓர் குஹையில் ஸ்ரீ அஹோபிலந்ருஸிம்ஹன் ப்ரஹ்லாதாழ்வானுக்கு ஸேவை ஸாதிக்கிறார். எதிரில் ப்ரஹ்லாதன் பெருமாளை ஸேவித்துக் கொண்டிருக்கிறார். இங்கு வீற்றிருந்த திருக்கோலம். இரண்டு திருக்கைகள். கைகளால் ஹிரண்யனை ஸம்ஹாரம் செய்யும் அவஸரம். பாவநந்ருஸிம்ஹனின் உத்ஸவரும், ஆழ்வார்களும் பாஷ்யகாரர், ஸ்ரீதேசிகன், ஆதிவண் சடகோபயதீந்த்ரமஹாதேசிகன், ஷஷ்டபராங்குஶமஹாதேசிகன் முதலியவர்களின் உத்ஸவமூர்த்திகளும் எழுந்தருளியிருக்கின்றனர். இங்கு உத்ஸவமூர்த்தியாக தசபுஜங்களுடன் கூடிய ந்ருஸிம்ஹன் எழுந்தருளியிருக்கிறார். திருவடித்தாமரையில் ப்ரஹ்லாதன் கூப்பின கைகளுடன் ஸேவைஸாதிக்கிறான். பகவான் ஹிரண்யகசிபுவைத் தன்மடியில் போட்டுக் கொண்டு, ஒரு திருக்கையால் அவன் சிரஸை அமர்த்திக்கொண்டும், இரண்டாவது திருக்கையினால் அவன் கால்களை அமர்த்திக்கொண்டும் மூன்றாவது நான்காவது திருக்கைகளால் அவன் குடலைப்பிளந்துகொண்டும், ஐந்தாவது ஆறாவது திருக்கைகளால் அவனதுரத்தத்தைப் பாநம் செய்துகொண்டும், ஏழாவது எட்டாவது திருக்கைகளில் திருவாழித்திருச்சங்குகளை தரித்துக்கொண்டும் ஒன்பதாவது பத்தாவது திருக்கைகளால் கத்தியையும் கதையையும் ஆச்ரிதஸம்ரக்ஷணார்த்தமாக தரித்துக்கொண்டுமிருக்கிறார். உபயநாச்சிமாரும் எழுந்தருளியிருக்கின்றனர். தனிக்கோயில் தாயாராக செஞ்சுலக்ஷ்மியுமிருக்கிறாள்.

மற்றோர் குஹையில், ப்ரஹ்மருத்ரர்களுக்கு ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹன் ப்ரத்யக்ஷமான ஸந்நிவேசம். ப்ரஹ்மாவும், ருத்ரனும் எதிரில் பூஜிக்கிறார்கள். ஹிரண்யஸம்ஹாரத் திருக்கோலத்துடன் ஸேவைஸாதித்திருக்கிறார். இதைத் திருவுள்ளம்பற்றியே ஸர்வஜ்ஞனிடத்தில் ஸர்வார்த்தக்ரஹணம் பண்ணிய திருமங்கையாழ்வாரும் 'நாத்தழும்ப நான்முகனுமீசனுமாய் முறையாலேத்த அங்கோராளரியாய்' என்று பாடியுள்ளார்.

இங்கு இரு பக்கங்களிலும் விமாநமும் மண்டபாதிகளும் அமைந்திருப்பது அதிமாநுஷசேஷ்டிதங்களென்றே சொல்லவேண்டும். இங்கு ராமாயணக்கதைகளைத் தூண்களிலும் கோபுரவாசல்களிலும் செதுக்கியிருக்கிறது. இந்த க்ஷேத்ரத்திற்கு ஸ்ரீராமன் எழுந்தருளி ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனை 'ஸ்ரீந்ருஸிம்ஹபஞ்சாம்ருதம்' என்கிற ஐந்து ச்லோகங்களால் மங்களாஶாஸநம் செய்தருளியதாகவும் ஸ்ரீ ஹரிவம்சத்தில் அந்தர்கதமான 'சேஷதர்மம்' என்னும் க்ரந்தத்தில் 47-வது அத்யாயத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இங்குள்ள ராமாயண சித்திரங்களில் பாலகாண்டஸம்பந்தமானவையேயில்லை. கிஷ்கிந்தாகாண்டம் முதலிய மேல்பாகத்துக்கதைகள்தான் இருக்கின்றன. இங்கும் ராஜாக்களால் செய்யப்பட்டுள்ள சிலாஶாஸநங்கள் அநேகமுள்ளன. இங்கு அர்த்தமண்டபத்தில் பெருமாள் ஸந்நிதிக்கு எதிரில் மிகப்பெரியதான பாறையால் மூடப்பட்டிருக்கும் ஓர் குஹையிருக்கிறது. (தொடரும்)

ஸ்ரீ:

உ ஷ ஸ் தி

○

1. உபநிஷத்

சாந்தோக்யோபநிஷத்து முதல் ப்ரபாடகத்தில் உஷஸ்தி என்கிற ஒரு ரிஷியின் கதை கூறப்பட்டிருக்கின்றது. அதை இங்கு சிறிது விவரிக்கின்றோம்—

மடசீஹதேஷு குருஷு—திடீரென்று பெரும் கல்மழை பெய்தது. குருதேசம் முழுவதும் நாசமாய்விட்டது. பயிரெல்லாம் அழிந்தது, தான்யமே கிடைக்கவில்லை. ஜனங்கள் எல்லோரும் ஆஹாரத்திற்கு வெகு கஷ்டப்பட்டனர். பலர் மரித்துவிட்டனர்.

ஆடிக்யா ஸஹ ஜாயயா—சிறு பெண்ணைக் கல்யாணம் பண்ணிக்கொண்டார். அவள் வாழ வேண்டும்; ஸந்ததி உண்டாகவேண்டும். தனது ப்ரஹ்மவித்யை பூர்த்தியடையவேண்டும். ஆசையால் அவளை அழைத்துக்கொண்டு வேறு தேசத்திற்குப்போய் த்ரவ்யம் ஸம்பாதித்து ஜீவிக்கலாமென நினைத்தார். அவளுடன் புறப்பட்டார். யார் அவர்?

உஷஸ்திர்ஹ சாக்ராயண:—சக்ரமஹர்ஷியின் புத்ரர் உஷஸ்தி மஹர்ஷி. குலத்திலும் வித்யையிலும் அநுஷ்டாநத்திலும் ஸாமர்த்யத்திலும் உலகமெல்லாம் ப்ரஸித்திபெற்றவர்.

இப்யக்ராமே ப்ரத்ராணக உவாஸ—கால் நடையாய் ப்ரயாணம் செய்கிறார். வேண்டிய ஆஹாரம் கிடையாது. மெலிந்து போனார்; களைப்புற்றார்; கஷ்டப்பட்டு நடந்தார். அஸ்தமித்தது; ஒரு க்ராமம் வந்தது; இரவு அங்கு தங்கினார். பசி வதைத்தது; தாங்கமுடியவில்லை. பத்நியை ஓரிடத்தில் இருக்கச்செய்து யார் வீட்டிலாவது புசிப்பதற்கு ஏதாவது ஆஹாரவஸ்து கிடைக்குமா என்று பார்க்கப் புறப்பட்டார். அசக்தி மிகுதியால் கால்கள் பின்னிக்கொண்டன. நடக்கமுடியவில்லை. அப்படியே ஊரைச்சுற்றினார் அங்கிருந்த ஜனங்கள் யார்? ச்ரோத்ரியர் ஒருவருமில்லை. எல்லோரும் யானைப்பாகர்களும் அவர்கள் போன்றவர்களுமே. ஆகிலும் வீடுவீடாகச் சென்று யாசித்துப்பார்த்தார். ஒன்றும்கிடைக்கவில்லை.

ஸஹேப்யம் குல்மாஷாந் காதந்தம் பிபிக்ஷே—பிறகு ஓரிடத்தில் ஒரு யானைப்பாகன் சுண்டல் தின்று கொண்டிருப்பதைக்கண்டார். அவனை அணுகி யாசித்தார்.

தம் ஹோவாச—அவரைப்பார்த்து அவன் கூறினான்.

நேதோ(அ)ந்யே வித்யந்தே யச்ச யே ம இம உபநிஹிதா இதி—‘இதோ என் எதிரில் வைத்து நான் புசித்துக்கொண்டிருக்கிறேனே இது தவிர வேறு சிறிதும் இல்லையே’ என்று. நான் எச்சில் செய்து சாப்பிட்டுக்கொண்டிருப்பது தவிர எச்சிலில்லாதது வேறு இல்லையே என்று வருத்தத்துடன் அவன் தெரிவித்தான்.

ஏதேஷாம் மே தேஹீதி ஹோவாச—நீ புசிப்பதிலேயே எனக்குக் கொஞ்சம் கொடு என்றார் அவர்.

தாநஸ்மை ப்ரததௌ—உடனே அவன் மிகுந்த விநயத்தோடும் உபசாரத்தோடும் அது முழுவதையும் அப்படியே அவருக்குக் கொடுத்துவிட்டான்.

அவர் கையில் பாத்ரமில்லை. தீர்த்தமில்லை. கைகால் அலம்பவில்லை. ஆசமநம் செய்யவில்லை. அப்படியே உட்கார்ந்தார். வாயில் போட்டு மென்று புசித்தார். ப்ராணதாரணம் ஏற்பட்டது. ஆயினும் நீர் அருந்தவேண்டிய நிலையில் இருந்தார். விக்கல் உண்டாயிற்றுபோலும். அதைக்கண்டு யானைப்பாகன் கூறினான்—

ஹந்தாநுபாநமிதி—‘ஸ்வாமிந்! நீர் குடிக்க வேண்டும். இதோ நீர் இருக்கின்றது. எடுத்துக் குடியுங்கள்’ என்று. இதைக்கேட்டு உஷஸ்தி மஹர்ஷி—

உச்சிஷ்டம் வை மே பீதம் ஸ்யாதிதி ஹோவாச—அப்பனே! நான் இதைக்குடித்தால்

எச்சில் தண்ணீர் குடித்ததாக ஆகுமென்று சொன்னார்.

ந ஸ்விதேதேऽப்யுச்சிஷ்டா இதி—இந்தச் சுண்டலும் எச்சிலேயன்றோ என்று யானைப் பாகன் கேட்டான்.

ந வா அஜீவிஷ்யமிமானகாதந்நிதி ஹோவாச, காமோ ம உதபாநமிதி—அப்பா! இதை நான் புசிக்காமல் இருந்தால் என் உயிர் போயிருக்கும். அவ்விதஆபத்து இப்பொழுது நீங்கிவிட்டது. இனி நான் நீ கொடுக்கும் இந்த நீரைப் பருகினேனாகில் வேணுமென்றே நான் இதைக் குடித்ததாக ஆகும், என்றார் மஹர்ஷி.

ஸ ஹ காதித்வாऽதிசேஷாந் ஜாயாயா ஆஜஹார—அவர் புசித்துவிட்டு மிகுந்ததைப் பத்நிக்காக எடுத்துக்கொண்டுவந்தார்.

ஸாऽக்ர ஏவ ஸுபிக்ஷா பபூவ। தாந் ப்ரதிக்ருஹ்ய நிதயௌ—மஹர்ஷி பத்நியை தனியே விட்டுப்போகும்போது ‘எந்த விதமாகவாவது ஆஹாரம்கிடைத்தால் என்னை ப்ரதீக்ஷிக்காமல், எனக்காகக் காத்திராமல், நீ உட்கொள்’ என்று கட்டளையிட்டுப் போயிருந்தார். நல்ல மனமுள்ள சிலர் தனியே தீநஸ்திதியில் உட்கார்ந்திருக்கும் அந்தப் பெண்ணைக்கண்டு மனமிரங்கி விசாரித்து தமக்குக் கிடைத்த ஆஹாரத்தைக் கொண்டு வந்து கொடுத்தனர். அதை அருந்தி அப் பெண் பசிதீர்ந்திருந்தாள். அதனால் அவள் தன் பதி கொண்டுவந்துகொடுத்த சுண்டலை வாங்கி அப்படியே வைத்திருந்தாள்.

ஸ ஹ ப்ராதஸ்ஸஞ்ஜிஹாந உவாச யத்பதாந்நஸ்ய லபேமஹி லபேமஹி தநமாத்ராம்। ராஜாஸௌ யக்ஷ்யதே ஸ மா ஸர்வைரார்த்விஜ்யைர்வ்ருணீதேதி—ராத்ரி அவ்விடத்திலேயே தங்கியிருந்தார்கள். பொழுதுவிடிந்தது. அங்கிருந்து புறப்படஆரம்பித்தார். பசியினால் களைப்புற்றார். அடி எடுத்து வைக்கமுடியவில்லை. ப்ராணனே போய்விடும்போலிருந்தது. பரிதபித்துத் தன் பத்நியைப் பார்த்துச் சொன்னார்—இப்பொழுது கொஞ்சம் ஆஹாரம் நமக்குக் கிடைத்தால் பணம் கொஞ்சம் கிடைக்கும். அரசன் ஒருவன் யஜ்ஞம் செய்யப்போகிறான். அவன் ரித்விக் கார்யம் எல்லாவற்றையும் என்னிடத்திலேயே ஒப்படைப்பான். அதற்குண்டான தக்ஷிணையெல்லாம் எனக்கே கிடைக்கும் என்று.

தம் ஜாயோவாச ஹந்த பத இம ஏவ குல்மாஷா இதி—அப்பொழுது அவருடைய மனைவி, இந்த சுண்டல்தான் இருக்கின்றதே. என்றாள்.

தாந் காதித்வாऽமும் யஜ்ஞம் விததமேயாய—அதைப் புசித்துவிட்டு யஜ்ஞம் நடக்குமிடத்திற்கு வந்துசேர்ந்தார்.

தத்ரோத்காத்ரூநாஸ்தாவே ஸ்தோஷ்யமாணாநுபோபவிவேச—அப்பொழுது அங்கு ரித்விக் கணங்களுள் ஒன்றான உத்காத்ருகணத்தைச் சேர்ந்த ப்ரஸ்தோதா உத்காதா ப்ரதிஹர்த்தா என்கிற மூன்று ரித்விக்குகள் தமக்குரிய ஸாமகானத்தை ஆரம்பிக்கும் தருவாயில் இருந்தார்கள். உஷஸ்தி அவர்களிருக்குமிடத்திற்கு விரைந்து சென்று அருகில் உட்கார்ந்தார்.

அவர்களைத் தனித்தனியே ஒவ்வொருவராக ஸம்போதனம் பண்ணி அவர்கள் செய்யவேண்டிய ஸாமகானத்திற்குத் தனித்தனியே ஒவ்வொரு தேவதை உண்டு என்றும் அதைத் தெரிந்துகொள்ளாமல் அவர்கள்தமக்குரியஸாமகானத்தைப்பண்ணினால் அவர்கள் தலை அறுந்து கீழே விழுந்துவிடும் என்றும் எச்சரித்தார். உடனே அவர்கள் ஸாமகானம் செய்வதைத் தவிர்த்து வெறுமனே உட்கார்ந்திருந்தார்கள். ‘ஏன் இப்படி தூஷ்ணீம் இருப்பது’ என்று யஜமானன் கேட்டபொழுது ‘இவரைக்கேள்’ என்று உஷஸ்தியைச் சுட்டிக்காட்டினார்கள்.

அத ஹைநம் யஜமாந உவாச பகவந்தம் வா அஹம் விவிதிஷாணீதி—பிறகு யஜமானன் இவரிடம் வந்து ‘ஸ்வாமி இன்னாரென்று தெரிந்துகொள்ள ஆவலாயிருக்கின்றது’ என்று விண்ணப்பம் செய்தான்.

உஷஸ்திரஸ்மி சாக்ராயண இதி ஹோவாச

'சக்ர மஹர்ஷியின் புத்ரன் உஷஸ்தி நான்' என்றார் அவர்.

𑌸 𑌹𑍋𑌵𑌾𑌚 𑌭𑌗𑌵𑌨𑍍𑌤𑌂 𑌵𑌾 𑌅𑌹𑌮𑍇𑌭𑌿𑌃 𑌸𑌰𑍍𑌵𑍈𑌰𑌾𑌰𑍍𑌤𑍍𑌵𑌿𑌜𑍍𑌯𑍈𑌃 𑌪𑌰𑍍𑌯𑍈𑌷𑌿𑌷𑌂 । 𑌭𑌗𑌵𑌤𑍋 𑌵𑌾 𑌅𑌹𑌮𑌵𑌿𑌤𑍍𑌤𑍍𑌯𑌾𑌨𑍍𑌯𑌾𑌨𑌵𑍃𑌷𑌿 । 𑌭𑌗𑌵𑌾𑌂𑌸𑍍𑌤𑍍𑌵𑍇𑌵 𑌮𑍇 𑌸𑌰𑍍𑌵𑍈𑌰𑌾𑌰𑍍𑌤𑍍𑌵𑌿𑌜𑍍𑌯𑍈𑌰𑌿𑌤𑌿—'ஸ்வாமியே எழுந்தருளியிருந்து ரித்விக் கார்யபாரம் ஸர்வத்தையும் நிர்வஹித்தருள வேண்டுமென்று மிக்க ஆவல்கொண்டு எங்கு எழுந்தருளியிருக்கிறதென்று கண்டுபிடிக்க முயன்றேன். குருதேசம் முழுவதும் கல்மாரியினால் பாழாய்விட்டதென்று கேட்டு ஸ்வாமியின் நிலை என்னவாயிற்றோவென்று மிகுந்த பயமும் சிந்தையும் கொண்டேன். நாலாபக்கங்களிலும் ஆட்களை அனுப்பினேன். ஸமாசாரம் ஒன்றும் தெரியவில்லை. இதுவரையில் ப்ரதீக்ஷித்தேன். இனி தேவரீர் எழுந்தருளுவது என்பது ஸர்வதா இல்லை என்று நிச்சயமுண்டாயிற்று. ஆகையால் இப்பொழுதுதான் இவர்களை வரித்து யஜ்ஞத்தை ஆரம்பித்தேன். ஆகிலுமென்ன. இவர்களை ப்ரார்த்தித்து நிறுத்திவிடுகிறேன். ஸ்வாமியே ஸர்வரித்விக் கார்யபாரத்தையும் வஹித்து அடியேனை க்ருதக்ருத்யனாக்கவேணும்' என்றான் அவன்.

𑌤𑌥𑍇𑌤𑌿 । 𑌅𑌥 𑌤𑌰𑍍𑌹𑍍𑌯𑍇𑌤 𑌏𑌵 𑌸𑌮𑌤𑌿𑌸𑍃𑌷𑍍𑌟𑌾𑌃 𑌸𑍍𑌤𑍁𑌵𑌤𑌾𑌂 । 𑌯𑌾𑌵𑌤𑍍𑌤𑍍𑌵𑍇𑌭𑍍𑌯𑍋 𑌧𑌨𑌂 𑌦𑌦𑍍𑌯𑌾𑌸𑍍𑌤𑌾𑌵𑌨𑍍𑌮𑌮 𑌦𑌦𑍍𑌯𑌾 𑌇𑌤𑌿—அப்படியே ஆகட்டுமென்றார் அவர். அதன்பிறகு சிறிது ஆலோசனைசெய்து பார்த்து மறுபடியும் கூறினார்—இவர்களை நீ வரித்துவிட்டாய். இனி ஏன் இவர்களை நிறுத்தவேண்டும். நான் அநுமதிக்கிறேன். இவர்களே இருக்கட்டும். இவர்களுக்கு வேண்டியதை நான் சொல்லிக்கொடுத்து ஸாமகாநமும் ஸ்தோத்ரமும் செவ்வனே நடைபெறச் செய்கிறேன். ஆனால் நீ எனக்குச் செய்யவேண்டியதென்னவென்றால் இவர்கள் மூன்றுபேருக்கும் சேர்ந்து எவ்வளவு பணம் கொடுக்கின்றாயோ அவ்வளவு எனக்குக் கொடுக்கவேண்டும்—என்று.

𑌤𑌥𑍇𑌤𑌿 𑌹 𑌯𑌜𑌮𑌾𑌨 𑌉𑌵𑌾𑌚—அப்படியே கொடுக்கிறேனென்றான் யஜமானன்

2. ப்ரஹ்மஸூத்ரம்

ப்ரஹ்மஸூத்ரம் மூன்றாவது அத்யாயம் நான்காம் பாதத்தில் ஏழாவது அதிகாரணம் ஸர்வாந்நாநுமத்யதிகரணம் என்பது. ப்ராணவித்யாநிஷ்டன் விஷயத்தில் 𑌨 𑌹 𑌵𑌾 𑌅𑌸𑍍𑌯𑌾𑌨𑌨𑍍𑌨𑌂 𑌜𑌗𑍍𑌧𑌂 𑌭𑌵𑌤𑌿, 𑌨𑌾𑌨𑌨𑍍𑌨𑌂 𑌪𑌰𑌿𑌗𑍃𑌹𑍀𑌤𑌂 𑌭𑌵𑌤𑌿, 'எதையும் அவன் புஜிக்கலாம். அவன் புஜிக்கக்கூடாத அந்நம் ஒன்றுமே இல்லை' என்று ஸர்வ அந்நத்திற்கும் அநுமதி செய்யப்பட்டிருக்கிறது. இந்த அநுமதி எப்பொழுதுமே அவனுக்கு உண்டா அல்லது புஜிக்காவிட்டால் ப்ராணன் போய்விடும் என்றிந்த ஆபத்காலமாத்ரவிஷயமா என்று இங்கு விசாரம் செய்யப்படுகின்றது. ஆபத்காலமாத்ரவிஷயமென்பது ஸித்தாந்தம். இதற்கு யுக்தி சொல்லும்போது ப்ரஹ்மோபாஸநம் செய்யும் உஷஸ்தியே ஆபத்காலத்தில் தான் அசுத்தமான அந்நத்தை உபயோகித்தார் என்றால் ப்ராணோபாஸநம் செய்யுமொருவன் விஷயத்தில் அதைப்பற்றிச் சொல்லவேண்டுமோ எனப்பட்டிருக்கின்றது.

3 ஸ்ரீபாஷ்யம்

இவ்வதிகாரணத்தில் இந்த உஷஸ்தி மஹர்ஷியின் கதை ஸ்ரீபாஷ்யத்தில் வெகு அழகாக ஸங்க்ரஹிக்கப்பட்டிருக்கிறது. அதை அப்படியே இங்கு எழுதுகிறோம்.

𑌉𑌷𑌸𑍍𑌤𑌿𑌃 𑌕𑌿𑌲 𑌚𑌾𑌕𑍍𑌰𑌾𑌯𑌣𑍋 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌦𑍍𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑍋 𑌮𑌟𑌚𑍀𑌹𑌤𑍇𑌷𑍁 𑌕𑍁𑌰𑍁𑌷𑍁 𑌦𑍁𑌰𑍍𑌭𑌿𑌕𑍍𑌷𑌪𑍀𑌡𑌿𑌤𑍇𑌷𑍁, 𑌇𑌭𑍍𑌯𑌗𑍍𑌰𑌾𑌮𑍇 𑌵𑌸𑌨𑍍 𑌅𑌨𑌶𑌨𑍇𑌨 𑌪𑍍𑌰𑌾𑌣𑌸𑌂𑌶𑌯𑌮𑌾𑌪𑌨𑍍𑌨𑌃, 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌨𑌿𑌷𑍍𑌠𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌨𑌾𑌮𑌵𑌸𑌾𑌦𑌾𑌤𑍍𑌮𑌰𑌕𑍍𑌷𑌣𑌃, 𑌇𑌭𑍍𑌯𑌂 𑌕𑍁𑌲𑍍𑌮𑌾𑌷𑌾𑌨𑍍 𑌖𑌾𑌦𑌨𑍍𑌤𑌂 𑌭𑌿𑌕𑍍𑌷𑌮𑌾𑌣𑌃, 𑌤𑍇𑌨 𑌚 𑌉𑌚𑍍𑌛𑌿𑌷𑍍𑌟𑍇𑌭𑍍𑌯𑍋𑌽𑌨𑍍𑌯𑍇 𑌨 𑌵𑌿𑌦𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌇𑌤𑌿 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑌾𑌤𑌃, 𑌪𑌾𑌨𑌮𑌪𑌿 '𑌏𑌤𑍇𑌷𑌾𑌂 𑌮𑍇 𑌦𑍇𑌹𑌿' 𑌇𑌤𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌤𑍇𑌨 𑌦𑍇𑌯𑌤𑍍𑌵𑍇𑌨𑍋𑌚𑍍𑌛𑌿𑌷𑍍𑌟𑌸𑍍𑌯 𑌕𑍍𑌷𑍁𑌧𑌾𑌯 𑌦𑌤𑍍𑌤𑌾𑌨𑍍 𑌕𑍁𑌲𑍍𑌮𑌾𑌷𑌾𑌨𑍍 𑌪𑍍𑌰𑌤𑌿𑌗𑍃𑌹𑍍𑌯, 𑌅𑌨𑍁𑌪𑌾𑌨𑌪𑍍𑌰𑌤𑌿𑌗𑍍𑌰𑌹𑍀𑌷𑍍𑌯𑍇𑌨𑌾𑌯𑌿𑌤𑌃, '𑌉𑌚𑍍𑌛𑌿𑌷𑍍𑌟𑌂 𑌮𑍇 𑌪𑍀𑌤𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍' 𑌇𑌤𑌿 𑌵𑌦𑌨𑍍 𑌚𑌾𑌕𑍍𑌰𑌾𑌯𑌣𑌃, '𑌕𑌿𑌨𑍍𑌨𑍇𑌤𑍇

19533

[illegible]

4- ரஸாஸ்வாதம்

இந்த அதிகாரணத்திற்கு எவ்வளவு உபயுக்தமோ அவ்வளவுகதாபாகத்தையே ஸ்ரீபாஷ்யகாரர் ஸங்க்ரஹித்திருக்கிறார் என்பதையும் உபநிஷத்வாக்யங்களில் வ்யங்க்யமாயிருந்த பல பொருள்களை ஸ்பஷ்டமாய் எடுத்துக் காட்டியிருக்கின்றார் என்பதையும் ஸூக்ஷ்ம தர்சநம் பண்ணும் வித்வான்கள் அறிவர்கள்.

இந்த ஸ்ரீபாஷ்யஸ்ரீஸூக்தியில் ஒரே ஒரு விஷயத்தைப்பற்றி மட்டும் இப்போது பராமர்சம் செய்ய விரும்புகின்றோம். உஷஸ்திஃ ஹ சாக்ராயணஃ என்று ஆரம்பித்து கடைசியில் உவாச என்ற ஆக்யாதத்தோடு, அதாவது முற்றுவினையோடு முடிகின்ற ஒரு பெரும் வாக்யமிதென்று தோன்றுகிறது. இப்படியாகில் இதன் நடுவில் மறுபடியும் ஸ ஹ சாக்ராயணஃ என்று ப்ரதமாந்த சாக்ராயணபதம் இருப்பது சேராது. ஒரே வாக்யத்தில் கர்த்ரு வாசகபதம் இரண்டுதடவை ப்ரயோகிக்கப்படுவதில்லை. [illegible] என்பது உசிதமன்று; அபேக்ஷிதமன்று. 'ஸ ஹ ஆஸீத்' என்று அத்யாஹாரம் பண்ணி வாக்யத்தை முடித்து சாக்ராயணஃ என்று வேறு வாக்யம் தொடங்குகின்றது என்பதும் இருப்பதை ரக்ஷிப்பதில் நமக்குள்ள ச்ரத்தையைக் காட்டுமேயொழிய வாக்யத்தின் சீர்மைக்குச் சிறிதும் சேராது. ஆகவே இது அபபாடமென்றும் சாக்ராயணபதத்தை விட்டே ஆகவேண்டுமென்றும் தோன்றிற்று. ஆனால் இது முதல் தோற்றம். பிறகு தீர்க்க காலம், அதாவது-முப்பது வருஷங்களுக்கு மேல்பட்டகாலம்- இதை பாடம் செய்துவர ஒரு நாள் முழுப்பதத்தையும் விடவேண்டியதில்லை. விஸர்கத்தை மாத்திரம் விட்டுவிட்டு ஸம்போதநமாக்கி இப்யன் வாக்யத்தோடு அந்வயிக்கிறதென்று கொள்ளலாமே என்று ஒரு தோற்றம் உண்டாயிற்று. இது உண்மை பாடமாக ஒப்புக்கொள்ளப்பட்டால் கீழ் குறித்த அநுபபத்திகளெல்லாம் கழிந்து ஸ்வாரஸமான அந்வயம் கிடைக்கிறது வாக்யம் அழகுபெறுகிறது என்பதுமாத்திரமில்லாமல் மிகவும் ரஸவத்தான வ்யங்க்யப்பொருளும் கிடைக்கின்றது. யானைப்பாகன் தின்றுகொண்டிருந்த சுண்டல் எச்சிலென்று தெரிந்திருந்தும் உஷஸ்தி அவனைக் கேட்டு வாங்கிச் சாப்பிட்டார். பசியால் வாடி வருந்திய ஒரு ப்ராஹ்மணன் கேட்கிறாரே என்று இரக்கத்தோடும் ப்ரீதியோடும் தன் ஆஹாரத்தை எடுத்துக் கொடுத்த அவன் பிறகு தண்ணீர் கொடுக்கும் போது 'எச்சில் தண்ணீரை நான்குடிப்பேனா' என்றுசொல்லி உஷஸ்தி மறுத்தபோது சிறிது கோபமும் ஸம்ப்ரமமும் கொண்டு 'சுண்டல் மாத்திரம் எச்சிலன்றோ' என்று அவமதிப்புத் தோன்றும்படி கேட்டான். ந ஸ்வித் [illegible] என்று ப்ராசீநபாஷா சைலியில் ந ஸ்வித் என்ற இவ்விரண்டு பதங்களையும் முதலில் ப்ரயோகித்திருப்பதினால் இங்கு அவஜ்ஞாகாகு ([illegible]) தோன்றுகின்றது. இதை ஸ்வகால பாஷாரீதியில் காட்டத் திருவுள்ளம்பற்றிய ஸ்ரீபாஷ்யகாரர் சாக்ராயண! என்ற ஸம்போதநபதம் ப்ரயோகித்து சாக்ராயண! கிம் ஏதே [illegible] என்று யானைப்பாகன் கேள்வி வாக்யத்தின் விந்யாஸத்தைச் செய்தருளினார். 'சாக்ராயணரே!' என்று அவரை விளித்து அவர் முகத்தைப் பார்த்து ஏதே என்று சுண்டலையும் கையால் காட்டிக் கேட்டான் என்பது கருத்து. பிறகு தர்மஸூக்ஷ்மச்ரவணத்தினால் தெளிந்தானாகிலும் முதலில் இப்யன் சிறிது கலங்கினான் என்பது ஸம்பவிக்கக்

கூடியதே.

இப்படி, உள்ள பாடத்தில் மிகுந்த ஔசித்யமும் ரஸமும் இருந்தபோதிலும் ஓரிடத்தில் பாடத்தை திருத்துவது என்று ஆரம்பித்தால் அவ்யவஸ்தையாய் எல்லோரும் எங்கும் தமக்குத்தோன்றுகிறபடி திருத்தம் செய்ய ஆரம்பித்துவிடுவார்களே என்று அஞ்சும் பெரியோர்கள் இதில் ஸம்ப்ரதிபத்தி பண்ணமாட்டார்களே என்று எண்ணி ப்ராசீந தாளபத்ரகோசங்களைப் பார்க்க முயன்றோம். அதன் பலமாகத் திருப்பதி ஸ்ரீவேங்கடேச்வர ப்ராச்ய வித்யாவிமர்சசாலையைச் சேர்ந்த புஸ்தகாலயத்தில் ஆயிரத்து நானூற்றுத் தொண்ணூற்றொன்பது (1499) என்ற எண்ணுடன் இருக்கும் தாளபத்ரகோசத்தில் இப்படி நாம் ஊஹித்த, விஸர்க்கமிராத ஸம்போதந சாக்ராயணபதபாடமிருப்பதைக் கண்டோம்.

மஹாவாக்யத்தின் ஆரம்பத்தில் இருக்கும் கர்த்ருபதத்தை மறந்து நடுவில் வஷந என்பதற்கு அடுத்தபடி ஶாக்ராயணஃ என்றுதான் இருக்கவேணுமென்ற எண்ணமுண்டாகி விஸர்கம் சேர்க்கப்பட்டிருக்கலாமாதலின் இப்பாடமுண்டாக புஷ்கலகாரணமுமுண்டு.

களதஂ்ஹயெந தஜிஉலிஜெ௵ஷ நிவெ
ஜிதஃ।
ஸயஹெதஸிஹூஹீதஂ வா ச்சிகதஂ வா
ஹூஸவஜிதெ ॥

ஸ்ரீ:

ஸத்க்ருத்யம்

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

○

அந்த அம்ருதம் ஸ்ரீமந்ருஸிம்ஹனுடைய தயையாகிற அம்ருத ஸமுத்ரத்தை அவர்களே கடைந்து அதிலிருந்து எடுக்கப்பட்டு அவர்களுடைய அநுபவத்திற்கும் லோகத்தாருடைய நல்வாழ்க்கைக்கும் காரணமாக வைக்கப்பட்டிருக்கிறது. அந்த அம்ருதத்தை நான் எப்பொழுதும் நாவினுடைய நுனியில் வைத்து ருசியை அநுபவிக்கிறேன் என்று இதன் கருத்து.

இங்கு 'ஸ்வஸெ' என்பதால் போக்யதாதிசயம் தோன்றுகிறது. 'நிவ்ருத்ததஷை:' என்கிற பரீக்ஷித்மஹாராஜருடைய ச்லோகத்தில் பகவத்கதாம்ருதத்தை அநுபவிப்பதில் பண்ணின உபகாரத்தை மறக்கத்துணிந்த க்ருதக்நனைத் தவிர எவன் அலம்புத்தியை அடைவன் என்கிறதுபோலன்றியே, 'ஹவிஷா ஹூஷாநஸ்ய ஷெவொவி ந ஶக்யதெ। ஹூதிஹூஷாநயொவா ஷஷ்யாவகிதஃ கூஷாஜ ॥' என்கிறபடி பதிலாக தேவதைகளாலும் உபகரிக்கமுடியாது. ஆனால் தன் சக்திக்கநுகுணமாக ப்ரீதிப்ரேரிதனாய் கொஞ்சம் ஸமர்ப்பிக்க வேணும் என்றும் மற்றோரிடத்தில் 'ஹூகூ கெஷ ஶாஹஸூதா:' என்று தன்னுடைய கரணங்கள் த்ருப்தியடைவதின்பொருட்டு ஆசார்யனுடைய கல்யாணகுணங்களை ஆஸ்திகர்களிடத்தில் சொல்லி எல்லோருமறியும்படி வளரப்பண்ணுவது என்றிருப்பதால் ஆசார்யன் விஷயத்தில் 'ஸ்வஸெ' என்பது ஸபலம்.

சுயவா, ஆசார்யனையும் சிஷ்யனைத் தன்னையும் ஒன்றாக ஸர்வேச்வரன் ரக்ஷிக்கவேணுமென்று ஆரம்பித்து ஒருவருக்கொருவர் த்வேஷம்பண்ணிக்கொள்வதில்லை என்று ப்ரார்த்தித்திருப்பதால் சிஷ்யனுக்கு ஆசார்யகுணங்களும் கார்யவிசேஷங்களும் ஸதா அநுபவவிஷயமாக இருக்குமென்பதை தெரியப்படுத்த 'ஸ்வஸெ' என்றாகவுமாம். ஸ்வஸெ என்ற உத்தமனால் சுஹூ என்கிறபதம்ஸித்தம். சுஹூ என்பது தனக்குநேர்ந்த பகவானுடைய ஜாயமானகடாக்ஷத்தின்பெருமையைத்தெரிவிக்கிறது. சுஹம் — நான். தன்னை நினைக்கும்போது தன்னுடைய

விசேஷணங்களுடனேயே நினைக்கும். சிலர் பகவானிடத்தில் பக்தியுள்ளவர்களாயிருப்பர். மோக்ஷம் பெறுவதற்கு யத்நமும் பண்ணுவர்கள். அதற்காக ஸதாசார்யனை அடைந்தும் அவர்கள் விஷயத்தில் பக்தியில்லாமலுமிருப்பார்கள். அப்படி பக்தியில்லாதவராய் இராமல் ஆசார்யன் ஸாக்ஷாத்ஸ்ரீயஃபதியின் அவதாரவிசேஷமே என்று தெளிந்து ஆசார்யன் தன்னால் பார்க்கப்பட்டமாத்ரத்தால் ஸகல பாபங்களையும் போக்கி பரிசுத்தியையும் உண்டாக்கி ப்ரஹ்மவிஷயக ஜ்ஞாநத்தையும் தந்து அந்த ஜ்ஞாநோபதேசம் பண்ணின திருமேனியோடே என்னுடைய ஹ்ருதயத்தில் புகுந்து மறுபடி மனஸ்ஸில் இதரர்கள் கலக்கத்தை உண்டுபண்ணமுடியாமல் ஸ்திரவாஸம் பண்ணி எதிரிகள் எவ்விதத்திலும் கலக்கமுயல முடியாதபடி தன் திருவடிகளை என் தலையில் வைத்தார்' என்று பெரியாழ்வார் அநுஸந்தித்தபடி ஆசார்யன் பெருமையையும் சேஷியான எம்பெருமானுடைய கைங்கர்யம் ஆசார்யாதி பாகவதர்கள் கைங்கர்யம் வரையில் வந்தால்தான் பூர்த்திபெற்றதாகும் என்பதையும் நினைத்து உள்ளபடி ஜாயமான கடாக்ஷம் பெற்ற நான் என்கிறாராகவுமாம்.

யஆ, பகவானும் கூட ஒரு விசேஷ ஆகாரத்தை அபேக்ஷித்தால் நம்மைக்கொண்டு தானே அடைகிறான் என்று நினைத்து ஈஹமென்கிறார். இதனால் பகவானுக்குத் தான் இஷ்டவிநியோகார்ஹன். ஆனதால் தன்னுடைய அழுக்கு நீங்கி விமலனாகிறான் என்று ஏற்படுகிறது.

எந்த அம்ருதத்தை ஆஸ்வாதம் பண்ணுகிறீர் என்றால் — கூஜிவண^ஶஂகொவாவ்ரு யொமிவெஹவம் என்கிற அம்ருதத்தை என்று அருளிச்செய்கிறார். இவ்விடத்தில் திருநாமம் பாதியாகச் சொல்லப்பட்டிருந்தாலும் பூர்ண திருநாமமாகவே இருக்கும். வைபவமென்றால்—விபவாவதாரத்தில் செய்த கார்யங்கள். ௱வாஸ¬ஜெவகஃயாவு ஶ்ருஃ வ¬ய¬ ஷா௦ ஷீ்ரு வ¬நாதி ஹி'[ஸர்வத்ரவஸிக்கிறவனாய்விளங்குகிறவனான எம்பெருமானுடைய கதையை சொல்லவேணுமென்கிற ப்ரார்த்தனையானது ப்ரச்நம்பண்ணுகிறவன் சொல்லுகிறவன் கேட்பவன் ஆகிய மூன்று புருஷர்களை பரிசுத்தம் பண்ணுகிறது.] என்கிறபடி ஆசார்யகதையை சொல்லக் கேட்குமவன் சொல்லுமவன் ப்ரார்த்தித்தவன் இவர்கள் மூவரையும் பரிசுத்தமாக்கவல்லது என்பதைத் தெரியப்படுத்தவே க்ரந்தரூபமாக அநுபவிக்கிறேன் என்கிறார். இந்த மஹானுக்கு மஹாதேசிகன் என்று சேர்த்து ஒரு திருநாமமிருந்தாலும் ஸ்ரீந்ருஸிம்ஹன் ஆதிப்பிரான் நம்மாழ்வார் இவர்களால் கொடுக்கப்பட்ட திருநாமமென்று அதில் ஆதரம் தோன்ற ஆதிவண்ஶடகோபாக்யயோகி என்கிறார்.

தேசிகன் என்றால் நல்வழி காட்டுமவர். மஹாதேசிகன் என்றால் தன்னால் காட்டப்பட்ட வழி மறுபடியும் புல்மூடிப்போய் மறைந்துவிடாமல் எப்பொழுதும் புதிதாகவேயிருக்கும்படி திருத்திவைத்தவர். இவ்விரண்டும் இந்த மஹானிடத்தில் நன்கு காணலாம். ஆதலால் 41-வது பட்டம் நம் அழகியசிங்கர் மஹாதேசிகன் என்றே அடிக்கடி ஸாதிக்கிற வழக்கம். அதாவது—ஸ்ரீமதஹோபிலம் என்னும் திவ்யதேசத்திலிருந்து அர்ச்சாரூபியான லக்ஷ்மீந்ருஸிம்ஹனை க்ராமங்கள்தோறும் வீடுகள்தோறும் எழுந்தருளப்பண்ணி எல்லாரையும் உஜ்ஜீவிக்கப்பண்ணிவைத்ததுமல்லாமல் தனக்குப் பிற்காலத்திலும் அதேமாதிரி நடக்கும்படி ந்ருஸிம்ஹனைப் ப்ரார்த்தித்து நடத்திவைத்ததைப்பற்றி மஹாதேசிகஶப்தவாச்யரானார்.

மேல் யதீந்த்ரர் என்பது ஸ்ரீபாஷ்யகாரர் திருநாமம். ஸ்ரீந்ருஸிம்ஹன் இவரை அஹோபிலம் அழைத்துச்சென்று ஸந்யாஸத்தைச் செய்துவைத்து அங்கு அர்ச்சாரூபியாக எழுந்தருளியிருக்கும் ஸ்ரீபாஷ்யகாரர் த்ரிதண்டத்தை எடுத்து இவர் கையில் கொடுத்து யதீந்த்ரன் என்று தோன்றுவதற்கே இம்மாதிரி செய்ததால் யதீந்த்ரன் என்கிற திருநாமம் அந்வர்த்தமாயிற்று. இவருடைய ஸ்ரீபாஷ்யப்ரவசநஸாமர்த்யத்தைப் பார்த்து, ஸ்ரீபாஷ்யகாரருடைய அவதாரமே இவர் என்று நம் பூர்வாசார்யர்கள் ஶாஷ்ருகாரஃ வ¬நஹ-ிவிகோ ஶாஷ்ருவுவவநாஷராஃ ।

யத்ரு ஷிவெணா ஸவத்தெஷ ஸ்ரஸகொவாய ஜூஷம்॥’ என்று மங்களம் பண்ணினார்கள்.

ஸடகோபன் என்று ஸாக்ஷாத் ந்ருஸிம்ஹனே தாஸ்யநாமம் செய்துவைத்தார். ஏனென்றால்—ஸ்ரீந்ருஸிம்ஹதாபிநீயோபநிஷத், தைத்ரியோபநிஷத், ஸம்வர்க்கவித்யாச்ருதிகள் இவைகளில் நிச்சிதமான ஜகத்காரணத்வ திவ்யமங்கள விக்ரஹவத்வ உபாஸ்யத்வாதிகள் ஸ்ரீந்ருஸிம்ஹனிடத்தில் அஸாதாரணமாக அமைந்தபடியை ‘ஆகம் சேர் நரசிங்கம்’ ‘எங்குமுளன்’ என்கிற பாசுரங்களாலும் தெரியப்படுத்தினவர் நம்மாழ்வாராகையாலே அவர் தன்னுடைய பெயரை ஸடகோபன் என்றே அந்தத் திருவாய்மொழியில் சொல்லியிருப்பதாலும் இம்மாதிரி தன்னுடைய மஹிமையை எல்லோரும் அறியும்படி இவரைக்கொண்டு நடத்தத் திருவுள்ளம்பற்றி ஸடகோபன் என்று தாஸ்யநாமத்தைச் செய்துவைத்தார்.

‘வண்’ என்கிறதால் ஔதார்யம் சொல்லப்படுகிறது. இந்த பிருது ஆதிநாதனால் கொடுக்கப்பட்டது. ஆழ்வாரை மடுவின்நின்றும் எடுத்து தம்மோடு சேர்த்துவைத்த உபகாரத்தை நினைத்து ‘வண்’ என்றும் சேர்த்து அநுஸந்திக்கும்படி நியமித்தார்.

‘ஆதி’ என்ற பதத்திற்கு ஜகத்காரணமென்று அர்த்தமானாலும் இந்த ப்ரகரணத்தில் ஆழ்வார் தனக்கு வாஸஸ்தானமான திருப்புளியாழ்வார் ஸமீபத்திலிருந்த தேவதாந்தரங்களை தன் நியமனத்தாலே அப்புறப்படுத்தி அந்த இடத்தில் செய்துவைத்த திருமண்டபத்தின் அழகைப் பார்த்து ஆநந்தித்து பாரிதோஷிகமாகக் கொடுத்த பெயர். இம்மாதிரி உகந்து பெரியோர்களின் பெயரை சிறுவர்களிடத்தில் யோஜித்துக் கொண்டாடுவது பெரியோர்கள் வழக்கம். ஸ்ரீராமன் லக்ஷ்மணனைக் கொண்டாடியிருப்பதை ‘ஸாவ ஜெஞ ந’ என்கிற ச்லோகத்தில் ‘ந ஸவஷு தத்த ஷிதா ஜஃ’ என்ற வாக்யத்தில் ஸ்பஷ்டம். ஆகையால் ‘ஆதி’ என்பது ஆதிப்பிரானுடைய திருநாமமாக ஆகியது. ஆக இந்த திருநாமத்தின் பதங்களின் சேர்க்கையின் காரணத்தையும் அர்த்தஸ்வாரஸ்யத்தையும் அநுஸந்திக்கவே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹனே இதற்குக் காரணமாக ஏற்படுவதால் இந்த மஹானின் வைபவம் ஸ்ரீந்ருஸிம்ஹன் க்ருபாஸமுதாத்தில் உண்டானது என்று தோன்றவே ‘ஸ்ரீஜனுஸிம்ஹ காருண்யஸுயாஞ்ஜியிதாஜநதம்’ என்றருளினர்.

இதில் ஸ்ரீஸப்தம் மஹாலக்ஷ்மியின் வாசகமாகவும் அவளுடைய நித்ய யோகத்திற்குக் காரணமான திருமேனியின் சோபையைச் சொல்லுகிறதாகவும் ஆகும். இந்த பெருமையை ‘அழகியான் தானே அரியுருவன் தானே’ என்றும் ‘அகலகில்லேன் இறையும்’ என்று ‘அலர்மேல்மங்கை யுறை மார்பா’ என்றும் ஆழ்வார்கள் அநுஸந்தித்தார்கள். ஆக ஸ்ரீமந்ந்ருஸிம்ஹன் என்றால் லக்ஷ்மீவிசிஷ்ட ந்ருஸிம்ஹன் என்றும் அழகு நிறைந்த ந்ருஸிம்ஹன் என்றும் ஏற்பட்டது. அழகியான் தானே அரியுருவன் தானே என்கிறவிடத்தில் பிராட்டியை ஸ்பஷ்டமாகச் சொல்லவேண்டாவோ என்றால்—திவ்யதம்பதிகளான அவர்கள் லோகரக்ஷணத்திற்காகத்தங்களுடைய கார்யவிசேஷங்களை பிரித்துக்கொண்டு ரக்ஷிக்கிற முறைகளை அறிந்தால் பெருமாளைச் சொன்னவிடத்தில் பிராட்டியையும் சொன்னதாகவே ஆகிவிடும். பகவத்ஸ்வரூபமும் திருமேனியும் எதனால் நிஷ்கர்ஷமாக அறியப்படும் என்றால் பிராட்டியின் ஸம்பந்தத்தினாலேயே என்று ச்ருதிகளாலும் ஆழ்வார் ஆசார்யர்கள் ஸ்ரீஸூக்திகளாலும் ஏற்படுகிறது.

காருண்யஸுயாஞ்ஜியிதாஜநதம்— தயையாகிற அம்ருதக்கடலைக் கடைந்து எடுக்கப்பட்ட அம்ருதம் என்கிறார். இந்த மஹான் செய்த ஒவ்வொரு கார்யமும் ஸ்ரீந்ருஸிம்ஹ தயையாலல்லது செய்யமுடியாது என்று ஏற்படுகிறது. இந்த அம்ருதாப்தியை எவர்கள் கடைந்தார்கள் என்றால்—அம்ருதத்தினால் எவர்கள் ஜீவிக்கநினைக்கிறார்களோ எவர்களுக்கு ஆச்ரிதர்களை ஜீவித்திருக்கும்படி பண்ண தயை இருக்கிறதோ அவர்கள்தானே கடைவார்கள். ஒத்தாசையும் செய்வார்கள். அவை இரண்

டும் ந்ருஸிம்ஹனுக்கும் லக்ஷ்மிக்கும் தத்பக்தர்களுக்குமல்லவா இருப்பது.

ந்ருஸிம்ஹபக்தர்கள் கடைந்தார்கள் என்றால் இந்த க்ரந்தத்திற்கு மூலம் அவர்கள் செய்தருளின க்ரந்தங்கள் என்று ஏற்படுகிறது. மறுபடியும் பிராட்டியும் தானுமென்றால் முன் அம்ருதம் கடைந்தகாலத்தில் பிராட்டியில்லாததால் அந்த கார்யத்தின் பலமாக ஸமுத்ரத்தில் உண்டான ஒவ்வொரு பலத்தை ஒவ்வொருவர்கள் அடைந்துவிட்டார்கள். அந்த ஸமுத்ரமதநமானது ப்ரயோஜநாந்தரபரர்களாகவே இருந்து கடையப்பட்டது. இது அப்படியல்ல. கடைகிறதும் ஸ்வபம் ப்ரயோஜநம், அர்த்தாத் பலித்த பலங்களில் ஒவ்வொன்றும் ஸர்வருக்கும் ஸர்வகாலமும் யே க்யமாகவும் போகஹேதுவாகவும் இருக்கும். முன் கடைந்து எடுத்த அம்ருதம் அநுகூலர்க்குமட்டும் போக்யம். இது அநுகூலர் ப்ரதிகூலர் அநுபயர் என்கிற மூன்று பேர்களுக்கும் போக்யமாக இருப்பதோடுகூட தங்களுக்கும் போக்யமாக இருக்கும். ஆகையால் இது லீலையாகவும் எல்லோர்க்கும் போகஹேதுவாகையால் (போகம் என்கிற மோக்ஷாநுபவத்திற்கு ஹேதுவாகையால்) போகமாகவும் திவ்யதம்பதிகளுக்கு ஆயிற்று.

ஆக பாகவதர்கள் என்ன ஆசார்யர்கள் என்ன இவர்களுடைய கதாச்ரவணம் பண்ணி வைப்பவர்கள் கேட்பவர்களுக்கு நன்மையை விளைவிப்பித்து மேல்நாளெல்லாம் நல்லவாழ்வாகப் பண்ணிக்கொடுக்கவந்த க்ருபாவான்கள் என்று தோன்றுகிறது. இப்படிப்பட்ட அநுபவம் ஒரு கரணத்தால் போராது. மூன்று கரணங்களாலேயும் செய்யத் தகுந்ததென்று அத்யாஹாரம் பண்ணிக்கொண்டு 'ஜுஷஸ்வ' என்கிறார். அதாவது—த்ரிகரணை:.

சுவாமி—'ஊனில் வாழுயிரே' என்கிற தசகத்தில் ஆழ்வார் பெருமாளுடன் தனக்கு ஏற்பட்ட அநுபவத்தை 'களித்தேனே' **என்று** சொல்லி இதைத் தனியாக அநுபவிக்கமாட்டாமல் அடியார்கள் குழாங்களுடன் என்றைக்கு அநுபவிப்பது என்பதுபோல் கஷ்டப்படாமல் 'ஜுஷஸ்வ' என்று வர்த்தமான நிர்த்தேசம் பண்ணினார்.

சுவாமி—பிற்பாடு சில பாகவதர்கள் வரவே அவர்களுக்கு ச்ரமமில்லாமல் அநுபவிக்க அநுக்ரஹித்ததுபோலன்றியே 'ஸாதவதே ஸஹ ஜுஷஸ்வ' என்கிறாராகவுமாம். எனக்கு பிற்காலம் ஜநிப்பவர்களும் அநுபவிக்கும்படிக்கு ச்லோகரூபமாக விஸ்தாரமாகச்செய்து வைக்கப்பட்ட அந்த ச்லோகங்களாலே அநுபவிக்கிறேன் என்றும் சொல்லலாம். இப்படித்தான் ப்ரபந்நன் உத்தரகாலங்களைப் போக்குவதற்கு அடையாளமாகவே. தரித்திருந்தேனாகவே' என்கிற பாசுரத்தில் 'எழுதி வாசித்தும் கேட்டும் வணங்கி வழிபட்டும் பூசித்தும் போக்கினேன் போது' என்று ஆழ்வார் அநுபவித்தபடியே நம் அழகியசிங்கர் அநுபவித்த விஷயத்தை விஜ்ஞாபித்துக்கொண்டேன்.

யஸ்த்ருதிகிவஞுவீய டுஷஜீஹவாக்ஷீத்த-
ஶாவிநாழ । ஶ்ரீஊஜு ஸிம்ஹ வத்ராயடீ:
ஸாமஹஸ்ரம் ஶரதாம் ஹஜெ ॥

சந்தாதாரர்களுக்கு ஓர் அறிவிப்பு

மணியார்டர் பாரத்தில் கூபனின் பின்புறத்தில் பணம் அனுப்புவோரின் விலாஸத்தை எழுத இடம் விடப்பட்டிருக்கிறது. ஆயினும் பல சந்தாதாரர்கள் அதில் தங்கள் விலாஸத்தை எழுதுவதில்லை. இதனால் பணம் அனுப்பியது யாரென்று தெரிந்துகொள்ளமுடியாமல் போகிறது. கூபனின் பின்புறத்தில் ஸரியான முறையில் முழுவிலாஸத்தையும் எழுதினால் எங்களிடமுள்ள விலாஸத்தையும் அதன்படி திருத்திக்கொள்ள ஸௌகரியமுண்டு. மணியார்டர் பாரத்தின் முன்புறத்தில் விலாஸம் எழுதப்பெற்ற பாகம் தபாலாபீஸுக்கே போய்விடுவதால் கூபனின் பின்புறத்தில் விலாஸத்தை எழுதவேண்டியது மிக அவசியம். ஆகையால் சந்தாதாரர்கள் மறவாமல் கூபனில் தங்கள் சந்தா நம்பரையும் அதன் பின்புறத்தில் தங்கள் முழுவிலாஸத்தையும் எழுதியனுப்பவேண்டுமெனக் கோருகிறோம்.

மானேஜர்

ஸ்ரீ:

நமது ஸம்ஸ்க்ருத கலாசாலை

ஸ்ரீ அஹோபிலமடத்தில் 42-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமத்பரமஹம்ஸேத்யாதி பிருதாலங்க்ருத ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹதிவ்யபாதுகாஸேவக ஸ்ரீவண்ஶடகோப ஸ்ரீ ஸ்ரீரங்க ஶடகோப யதீந்த்ரமஹாதேசிகன் திவ்யாஸ்தானத்திற்கு எழுந்தருளியவுடன் நம் ஸ்ரீமந்நிகமாந்தமஹாதேசிகஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்த சிறுவர்களுக்கு ஆத்மோஜ்ஜீவநத்திற்காக ஓர் வைதிக கலாசாலை ஸ்தாபிக்கவேண்டுமென்று திருவுள்ளம் பற்றியாயிற்று. அதை அனுஸரித்து சித்ரபானுவருஷ ஆனி மீ (1942ம் வருஷம் ஜுன் மாதம்) த்வயம் விளைந்த திருப்பதி என்று ப்ரஸித்திபெற்ற மதுராந்தகத்தில் ஓர் கலாசாலையை ஸ்தாபித்தருளினர். அவ்விழாவிற்கு அப்பொழுது ஸ்ரீஸந்நிதி ஸ்ரீகார்யம் ஸ்வாமியாய் எழுந்தருளியிருந்த ஸ்ரீ. உப. அம்மணம்பாக்கம், வித்வான், சிரோமணி, நரஸிம்ஹாசார்ய ஸ்வாமி ஸ்ரீமதழகியசிங்கரின் திவ்யநியமன ஸ்ரீமுகத்துடனும் பலமந்த்ராக்ஷதையுடனும் மதுராந்தகத்திற்கு எழுந்தருளினர். ஸ்ரீ.உப. கோஷ்டீபுரம் மஹாவித்வான் ஸௌம்யநாராயணச்சார் ஸ்வாமியும் அதுஸமயம் அங்கு எழுந்தருளியிருந்தார். சென்னை ஹைகோர்ட் மாஜி ஜட்ஜ் ஸ்ரீ. உப. வி. வி. ஸ்ரீநிவாஸ அய்யங்கார் ஸ்வாமி, ஸ்ரீ. உப. திருப்பாப்புலியூர் டி. ஈ. சடகோபாசார் ஸ்வாமி முதலியவர்களும் எழுந்தருளியிருந்தார்கள். சென்னையில் பல வருஷங்கள் கல்வித்துறையில் அனுபவம் வாய்ந்து ஜ்ஞாநவைராக்யசீலரான மஹரிஷி என்ற பிருதும் பெற்ற ஸ்ரீ. உப. வங்கீபுரம் வித்வான் எஸ். வாஸுதேவாசார் ஸ்வாமி ஸ்ரீமதழகியசிங்கரால் ஷை கலாசாலையின் நிர்வாஹத்திற்காக (மானேஜராக) நியமிக்கப்பட்டு அச்சமயம் அங்கு எழுந்தருளி கலாசாலையின் நிர்வாஹவிஷயங்களைப்பற்றி எடுத்துரைத்தார். நம் ஸம்ப்ரதாயத்தில் சிகரமாய் விளங்கிய ஆத்மகுணபரிபூர்ணஸம்பந்நரான வித்வச்ச்ரேஷ்டருமான ஸ்ரீ. உப. கோஷ்டீபுரம் ஸ்வாமி (ஸ்ரீ ஸௌம்யநாராயணசார் ஸ்வாமி) ஷை கலாசாலைக்கு முதல் அத்யக்ஷராக நியமிக்கப்பட்டு அந்த ஸ்வாமியும் அக்கைங்கர்யத்தை ஏற்றுக்கொண்டார்.

பலவருஷங்களாக மதுராந்தகம் ஸ்ரீ அஹோபில மடத்தில் நடத்தப்பட்டுவந்த ஸம்ஸ்க்ருத ஆரம்பபாடசாலையையும் இந்த ஸம்ஸ்க்ருத கலாசாலையுடன் சேர்த்து இணைக்கப்பட்டது. ஸம்ஸ்க்ருத கல்வித்துறையில் பயிற்சிபெற்றவர்களும் வைதிக ஸம்ப்ரதாயத்தில் ஈடுபட்டவர்களும் ஸ்ரீ அழகியசிங்கரிடத்தில் காலக்ஷேபம் செய்தவர்களுமான ஆறுவித்வான்கள் ப்ரவசநகர்த்தாக்களாக நியமிக்கப்பட்டார்கள். விஷுவருஷ கார்த்திகைமீ ஆரம்பிக்கப்பட்ட வேதபாடசாலையும் பிறகு ஆரம்பிக்கப்பட்ட ப்ரபந்தபாடசாலையும் பிறகு இக்கலாசாலையுடன் சேர்க்கப்பட்டது. வித்யார்த்திகளின் ஸௌகர்யத்தை உத்தேசித்து பல வஸதிகளுடன் கூடிய இலவச போஜனசாலையும் அமைக்கப்பட்டது. சிலமாதகாலம் இக்கலாசாலையானது மதுராந்தகம் ஸ்ரீ அஹோபிலமடத்திலேயே நடந்துவந்தது.

கூடிய சீக்கிரத்தில் ஸுமார் நாற்பதினாயிரம் ரூபாய் செலவில் ஓர் உயர்ந்த கட்டடம் நிர்மாணிக்கப்பட்டது. ஸ்ரீமதழகியசிங்கர் தன் ஸஞ்சாரக்ரமத்தில் நேரிலேயே மதுராந்தகம் எழுந்தருளி புதியதாகக் கட்டப்பட்ட கலாசாலைக் கட்டிடத்தில் ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹனுடன் எழுந்தருளி கலாசாலையை அவ்விடத்தில் ஆரம்பித்து வைத்தருளினர். அதுமுதல் இக்கலாசாலையானது ஷை கட்டிடத்திலேயே மேன்மேலும் வ்ருத்தியடைந்துவருகிறது.

இப்படி வெகு விமர்சையாய் கலாசாலையை நடத்திவந்த ப்ரதம அத்யக்ஷரான ஸ்ரீ. உப. கோஷ்டீபுரம் ஸ்வாமி திருநாட்டுக்கு எழுந்தருளவே ஷை கலாசாலையை நிர்வஹிக்கத் தகுதிவாய்ந்த ஓர் வித்வச்ச்ரேஷ்டரைத் தேர்ந்தெடுக்கவேண்டிய பொறுப்பு ஸ்ரீமதழகியசிங்கருக்கு ஏற்பட்டது. ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹன் கடாக்ஷவிசேஷத்தால் ஸ்ரீமதழகியசிங்கர் ஸகலகுணஸம்பந்நராயும், ஸ்ரீ கோஷ்டீபுரம் ஸ்வாமி ஸ்தானத்திற்குப் பொருத்தமானவரா

ஸ்ரீ:

ஸ்ரீ அஹோபிலமடம் 42-வதுபட்டம் ஸ்ரீ அழகியசிங்கரால் ஸ்தாபிக்கப்பட்ட கலாசாலை
மதுராந்தகம்.



முழுத்தோற்றம்.

ப்ரவேசம்



ப்ரார்த்தனமண்டபத்தில்
ஸ்ரீ அழகியசிங்கரின் திருவுருவப்
படம்.



ஸ்ரீகோசாலயம்
(Library)



வித்யார்த்திகளுக்கான போஜனசா
லையும் கிணறும்.

யும் வித்வத்ச்ரேஷ்டராயும் சிரோமணி பிருதாலங்க்ருதருமான ஸ்ரீ. உப. தேவனார்விளாகம் ஸ்ரீ ஸ்வாமியை (தேவனார்விளாகம், வங்கீபுரம் ஸ்ரீ. உப. ப. ஸ்ரீ. லக்ஷ்மீநரஸிம்ஹாசார் ஸ்வாமி) நியமித்தது, அக்கலாசாலையின் பாக்யவிசேஷம். ஒருவருஷகாலம் ஸ்ரீ ஸ்வாமி தன்னுடைய அனுபவவிசேஷத்தால் அக்கலாசாலை நிர்வாஹத்தை திறமையுடன் நடத்திவந்தார். அக்காலத்தில் ஷெ கலாசாலை அநேக துறைகளிலும் மேம்படவேண்டிய திருத்தங்களுடன் நிர்வஹிக்கப்பட்டது. ஆத்மகுணபூர்த்தியால் வித்யார்த்திகளையும் ப்ரவசநகர்த்தாக்களையும் வைதிகதர்மாநுஷ்டாநங்களில் தம்முடன் ஈடுபடும்படி செய்தார். ஸ்வகுடும்பகார்யங்களை உத்தேசித்து அந்த ஸ்ரீஸ்வாமி தேவனார்விளாகத்தில் எழுந்தருளி இருக்க அவச்யம் நேர்ந்தது. ஆனதுபற்றி அத்யக்ஷர் பதவியிலிருந்து விலகிக்கொண்டார். நம் பாக்யவிசேஷத்தால் இந்த மஹான் (இப்பொழுது) தத்காலம் ஸ்ரீ அஹோபிலமடம் 43-வது பட்டத்தை அலங்கரிக்கிறார். இந்த சின்ன அழகியசிங்கர் கலாசாலையின் அபிவ்ருத்தியையே முக்கிய நோக்காகக்கொண்டு எல்லோரையும் அநுக்ரஹிக்கும் பாக்யம் நமக்குக் கிடைத்திருக்கிறது.

பிறகு திருப்பதி ஸம்ஸ்க்ருத கலாசாலையில் லெக்சரராக இருந்த ஸ்ரீ. உப. வித்வான் சேட்லூர் ராகவாச்சார் ஸ்வாமி இப்பதவியை ஏற்றுக்கொண்டு சிலகாலம் எழுந்தருளியிருந்தார் தேஹ அஸௌக்கியகாரணமாய் இந்த ஸ்வாமி இப்பதவியிலிருந்து விலகிக்கொள்ள நேர்ந்தது இதற்குப்பின் ஸ்ரீ அழகியசிங்கரின் பரிபூர்ண க்ருபைக்குப் பாத்திரரானவரும் இக்கலாசாலையின் கைங்கர்யத்தில் ஆரம்பம்முதல் ஈடுபட்டுவந்தவருமான கல்யாணபுரம் ஈச்சம்பாடி, டி. ராமஸ்வாமி அய்யங்கார் (எம்.ஏ, எல்.டி,) கௌரவ அத்யக்ஷராக நியமிக்கப்பட்டார். சென்னை பிரஸிடென்ஸி காலேஜில் அஸிஸ்டெண்ட் புரொபஸர் உத்யோகம் பார்த்துவரும் இவர் 1945-ம் வருஷம் ஜூலை மாதம்முதல் அரசாங்கத்தார் அனுமதி பெற்று இக்கைங்கர்யத்தில் ஈடுபட்டிருக்கிறார்.

1918ம் வருஷத்தில் இக்கலாசாலையின் மானேஜராக இருந்த ஸ்ரீ. உப. எஸ். வாஸுதேவாசார்யர் ஸ்வாமி திருநாட்டிற்கு எழுந்தருளவே, அப்பொறுப்பை வஹித்து நன்றாக நடத்துவதற்காக, ஸ்ரீ. உப. சிரோமணி வித்வான், தேவனார்விளாகம் ப. ஸ்ரீ. ஸ்ரீநிவாஸதேசிகாசார்யர் (எம்.ஏ., பி.எல்., அட்வொகேட்) ஸ்வாமியை இக்கலாசாலையின் மானேஜராகவும், ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா ஸம்பாதகராயும் ஸ்ரீ அழகியசிங்கரால் நியமிக்கப்பட்டு, அவரும் கலாசாலையை பல துறைகளில் நன்றாக நடத்தி வருகிறார்.

இடையே இக்கலாசாலைக்கு உட்பட்ட போஜனசாலை அஹோபிலமடத்திலிருந்து இக்கலாசாலைக் கட்டிடத்திற்கே மாற்றப்பட்டது. ப்ரவசனகர்த்தாக்கள் முதலியவர்களுடைய ஸௌகர்யத்தை உத்தேசித்து ஸுமார் ரூபாய் 30,000 சிலவில் அவர்கள்குடியிருக்க 12வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. கலாசாலையின் நிர்வாஹத்திற்காக ஸுமார் இரண்டரை லக்ஷ ரூபாய்க்கு தஞ்சாவூர் ஜில்லா, மன்னார்குடி தாலுகா, பெருகவாழ்ந்தானுக்கு ஸமீபத்தில் மறவாதி என்ற ஓர் க்ராமமும் ஸ்ரீமதழகிய சிங்கரால் வாங்கப்பட்டிருக்கிறது. இக்கலாசாலைக்கு ப்ரதிமாதமும் ஸராஸரி ரூ. 2000 சிலவு ஆகிறது. வித்யார்த்திகளுக்கு படிப்புவஸதி, இடவஸதி, போஜன வஸதி முதலியவைகள் எவ்வளவோ ச்ரத்தையுடன் கொடுக்கப்பட்டு வருகிறது. வித்யார்த்திகளின் தேஹாரோக்யத்தை உத்தேசித்து ஓர் டாக்டர் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

இக்காலத்துமுறையை அனுஸரித்து இக்கலாசாலை ந்யாய, வ்யாகரண சிரோமணி பாகங்கள் மதராஸ் யூனிவர்ஸிடியுடன் இணைக்கப்பட்டிருக்கிறது. சென்னை அரசாங்க ஸம்ஸ்க்ருத என்ட்ரன்ஸ் பரீக்ஷைக்கும் வித்யார்த்திகள் ஒவ்வொரு வருஷமும் அனுப்பப்பட்டுவருகிறார்கள். இக்கலாசாலை ஆரம்பமானதுமுதல் நாளதுவரை ஏதோ ஒன்றிரண்டு வித்யார்த்திகள் தவிர மற்ற எல்லோரும் எக்காலத்திலும் பரீக்ஷைகளில் நன்கு தேர்வு பெற்றுவருகிறார்கள். இக்கலாசாலையில் புஸ்தகசாலை ஒன்று பல அரிய புஸ்தகங்களுடன் நிர்மாணிக்கப்பட்டிருக்கிறது. இதிலிருந்து வித்யார்த்திகளுக்குவேண்டியபுஸ்தகங்கள் அவர்கள் வேண்டும்போது கொடுக்கப்பட்டுவருகின்றன.

வித்யார்த்திகள் தர்மாநுஷ்டாநபரர்களாய் இருக்கவேண்டும் என்றும் வித்யாப்யாஸத்தைப் பூர்த்திசெய்தபிறகே இக்கலாசாலேயிலிருந்து விலகலாமென்பதுமே இக்கலாசாலேயின் முக்கிய நியமங்கள். தத்காலம் வேதப்ரபந்த வித்யார்த்திகளுக்கும் ஸாஹித்யபாடங்கள் போதிக்கப்பட்டுவருகின்றன. இவ்வளவு ஸௌகர்யங்களோடு அதிக பணச்சிலவையும் பொருட்படுத்தாமல் நம் தேசிகஸம்ப்ரதாய சிறுவர்களின் அபிவ்ருத்தியே முக்கியம் என்ற நோக்கத்துடனும் ஸ்ரீமதழகியசிங்கர்களின் அனுக்ரஹவிசேஷத்தால் இக்கலாசாலே நடத்தப்பட்டுவந்தாலும்கூட தத்காலம் இக்கலாசாலேயில் 55 வித்யார்த்திகளே இருக்கின்றனர். பல பாடங்களே போதிக்கவேண்டியிருப்பதால் 12 ப்ரவசனகர்த்தாக்கள் இப்பொழுது கைங்கர்யம் பார்த்துவருகின்றனர்.

நம் ஸம்ப்ரதாயத்தைச்சேர்ந்த பெரியவர்களுக்குக்கூட ஸம்ஸ்க்ருத வித்யையில் உள்ள ஆதரவுக்குறைவுதான் இதற்குக் காரணம். 'ஸம்ஸ்க்ருதம் நாம தைவீவாக்' என்ற ஒரு வாக்யத்தை அனுஸரித்து இப் பாஷாபிவ்ருத்தியில் எல்லோரும் அந்வயிக்கவேண்டுமென்று ப்ரார்த்திக்கப்படுகிறது.

ஸ்ரீ:

புஸ்தகங்கள் வரவு

ஸ்ரீமதுராந்தக (ஸ்ரீ வகுளாரண்ய) க்ஷேத்ர மாஹாத்ம்யம்.

(கிடைக்குமிடம்:—ஸ்ரீ கோதண்டராம ஸ்வாமி தேவஸ்தானம், மதுராந்தகம். விலே ரூ. 1-8-0.)

இந்நூலில் ஸ்ரீ மதுராந்தகக்ஷேத்ரத்தின் மாஹாத்ம்யம் நான்கு பாஷைகளில் சுருக்கமாயும் தெளிவாயும் கூறப்பட்டிருக்கிறது. தக்ஷிணரயில்வே மானேஜர் ராவ்பஹதூர் ஸ்ரீ. கே. ஆர். ராமானுஜம் அவர்கள் தமிழிலும், சென்னே ஹைகோர்ட்டு நீதிபதி கனம் வி. எச். ராகவராவ் அவர்கள் தெலுங்கிலும், காசி ஸம்ஸ்க்ருதகலாசாலே ஆசிரியர் ஸ்ரீ. உப. நீலமேகாச்சார்ய ஸ்வாமி ஹிந்தியிலும், சென்னே மயிலாப்பூர், ஸ்ரீமான் வி. டி. ராமஸ்வாமி அய்யங்கார் அவர்கள் இங்கிலீஷிலும் இந்த க்ஷேத்ரத்தின் வரலாற்றை நன்கு எழுதியிருக்கிறார்கள். இந்த திவ்யதேசத்தெம்பெருமானின் அழகிய போட்டோவும் கோயிலின் போட்டோக்களும் புஸ்தகத்தை அலங்கரிக்கின்றன. ராமபக்தர்கள் படித்து இன்புறுவார்களாக.

ஸ்ரீஸ்துதி (இராக மாலிகை)–

(ஸ்ரீமந்நிகமாந்தமஹாதேசிகன் அருளிச்செய்தது. ஸங்கீதவித்வான் எ. கே. ராகவாச்சாரியார் இராகமாலிகையில் ஸ்வரப்படுத்தியது. கிடைக்குமிடம்— ஆசிரியர், 103, சோலேயப்ப முதலித்தெரு, கும்பகோணம். விலே ரூ. 1–0–0.)

ஸங்கீதம் முக்யமாய் பகவத்குணநுபவத்திற்கே ஏற்பட்டது. அது பகவத்விஷயமல்லாமல் சிற்றின்பவிஷயமாய் போக ஆரம்பித்தால் நாளடைவில் நம்மைக்கெடுத்துவிடும். இவ்வுண்மை மனத்தில் படாத காரணத்தால் ஸங்கீதக்கலே தற்காலம் பலரால் தவருன வழியில் இழுத்துச்செல்லப்படுகிறது. உயர்ந்த ஸாஹித்யத்தோடு ஸங்கீதத்தைக் கலந்து அநுபவிக்கும்படிசெய்வதே ஸங்கீதவித்வான்களின் கடமை. அத்துறையில் இவ்வாசிரியர் இந்நூல்மூலம்பெரிதும் உதவியிருக்கிருர். வேதாந்தஸாரமும் ஸம்ப்ரதாயதத்வமும் கவிதைச்சுவையும் நிறைந்த ஸ்ரீஸ்துதியை இவ்வாசிரியர் ஸங்கீத சாஸ்த்ரமுறையில் சிறிதும் வழுவாமல் பல ராகங்களில் ஸ்வரப்படுத்தியிருக்கிருர். ச்லோகங்கள் நாகர எழுத்திலும் தமிழிலும் அச்சிடப்பட்டிருக்கின்றன. ஸங்கீத ருசியுள்ளவர்கள் நல்லிசையில் இத்துதியைப்பாடித் திருமாமகள் திருவருளேப்பெறலாம். ஸங்கீதாபிமானிகளான ஆஸ்திகர்களின் ஆதரவிருந்தால் இவ்வாசிரியர் ஸ்ரீ நிகமாந்தமஹாதேசிகனருளிச்செய்த மற்றும் பல ஸ்தோத்ரங்களேயும் இம்மாதிரி ஸ்வரப்படுத்த முற்படுவாரென்பது

திண்ணம்.

குறிப்பு—ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியாவில் விமர்சம் செய்வதற்கு புஸ்தகங்களை அனுப்ப விரும்புவோர் இரண்டு பிரதிகளை அடியில்கண்ட விலாஸத்திற்கு அனுப்ப வேண்டும். விலாஸம்—ஸ்ரீந்ருஸிம்ஹ ப்ரியா, மாலோல பிரஸ், **30** பனகல் தெரு, திருவள்ளூர்.

ஸ்ரீ:

செய்திகள்

10-வது வார்ஷிக மஹோத்ஸவம்

ஸ்ரீ அஹோபிலமடம் வேத-ப்ரபந்த-ஸாஸ்த்ர பாடசாலையின் 10-வது வார்ஷிகமஹோத்ஸவம் 7-4-52 திங்கட்கிழமை வெகு விமர்சையாகக் கொண்டாடப்பட்டது.

இவ்வைபவத்திற்கு ஸ்ரீ ஸந்நிதி ஸ்ரீகார்யம் ஸ்வாமி ஸ்ரீ அழகியசிங்கர்களுடைய அநுக்ரஹபூர்வகமான பலமந்த்ராக்ஷதையுடன் எழுந்தருளியிருந்தார்.

இக்கொண்டாட்டத்திற்கு இக்கலாசாலையின் மானேஜரும், ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியாவின் ஸம்பாதகருமான, தேவனூர்விளாகம் வித்வான் சிரோமணி ஸ்ரீ. உப. ப. ஸ்ரீ. ஸ்ரீநிவாஸ தேசிகாசார்யர், (எம்.ஏ., பி.எல்.,) ஸ்வாமி தலைமை வஹித்தார்.

கலாசாலையின் கௌரவ அத்யக்ஷர் கல்யாணபுரம், ஈச்சம்பாடி டி. ராமஸ்வாமி ஐயங்கார் (எம்.ஏ., எல்.டி.,) ஸ்வாமி 1951–1952 வருஷத்திய நிர்வாஹ அறிக்கையை ஸமர்ப்பித்தார். பிறகு ஸ்ரீகல்யாணபிவர்த்தினீ ஸபையின் அறிக்கையையும் அதன் கார்யதர்சிகள் ஸமர்ப்பித்தார்கள்.

பிறகு உபந்யாஸம்செய்வதற்கு எழுந்தருளியிருந்த வில்லூர், ஆசுகவி, சிரோமணி, வித்வான் ஸ்ரீ-உப. ஸ்ரீநிவாஸராகவாசார் ஸ்வாமி முதலில் ஸ்ரீ அழகியசிங்கர்களின் குணவிசேஷத்தைப்பற்றி உபந்யஸித்து, 'வித்யார்த்திகளின் கடமை' என்ற விஷயத்தை ப்ரமாணங்களுடன் வெகு அழகாக உபதேசித்தார்.

முந்திய வருஷம்போல் இவ்வருஷமும் தேர்ச்சிபெற்ற வித்யார்த்திகளில் சிறந்தவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

ஸ்ரீஸந்நிதி ஸ்ரீகார்யம் தையார் வித்வான், ஸ்ரீ, உப. ஜோ. ரங்காசார் ஸ்வாமி, வித்யார்த்திகள் ப்ரவசநகர்த்தாக்களிடத்தில் நடந்துகொள்ளவேண்டிய முறையை உபதேசித்தார்.

பிறகு அக்ராஸநாதிபதியான ஸ்ரீமானேஜர் ஸ்வாமி கலாசாலை ஸம்பந்தப்பட்ட எல்லோரும் தங்கள் கடமையை ஸரியாகச் செய்து வரவேண்டும் என்றும், அப்படிச் செய்தால் ஸ்ரீ அழகியசிங்கர்களுடைய அநுக்ரஹத்தாலும் ஸ்ரீந்ருஸிம்ஹனின் கடாக்ஷத்தாலும் இக்கலாசாலை மேன்மேலும் வ்ருத்தியடையும் என்றும் விரிவாக முடிவுறையில் கூறினர்.

இம் மஹோத்ஸவத்திற்கு எழுந்தருளியிருந்த ஸ்வாமிகள் யாவருக்கும் வேதபாராயணத்துடன் சந்தநதாம்பூலாதிகள் வழங்கியதும் உத்ஸவம் இனிது நிறைவேறியது.

கல்யாணபுரம் ஈச்சம்பாடி,
தி. ராமஸ்வாமி ஐயங்கார், கௌரவாத்யக்ஷர்.

ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் ஸபை
ஜோகந்தர்-பம்பாய்.

ஸ்ரீராமநவமி மஹோத்ஸவம் 26-3-52 முதல் 6-4-52 வரையில் பாராயண ப்ரவசநங்களுடன் நடந்தது. அதில் அந்வயித்த சில ஸ்வாமிகளுக்கு வேஷ்டி, ஸம்பாவனை மரியாதைகளும் ஸமர்ப்பிக்கப்பட்டன.

மு. வ. வரததாஸன், கௌரவ கார்யதர்சி.

ஸ்ரீ:

நம்மாழ்வாரும் நரசிங்கனும்

புருஷனும் மனைவியும் சேர்ந்து இன்புற்று வாழவேண்டியவர்கள் அப்படியில்லாமல் ஒருவரையொருவர் விட்டுப்பிரிந்தால் இருவரும் துக்கக்கடலில் மூழ்கிவிடுவார்கள். துக்கத்தைத் தாங்கமுடியாதவர்கள் தூதர்களையனுப்புவதும் உண்டு. அவர்களுக்கு 'காந்தாஶ்லேஷாதபிக ஸௌஹ்ருதம் காந்திநாம் உபஸ்திதாத்' என்றபடி ப்ரியையுடன் சேர்ந்ததைவிட தூதன் கிட்டுவது அதிக ஆநந்தத்தைத்தரும். சிலர் 'காமார்த்தா ஹி ப்ரக்ருதிக்ருபணாஶ்சேதநாசேதநேஷு' என்னும்படி காமந்தராய் மேகம் பர்வதம் முதலியவைகளையும், சிலர் நாரை, அன்றில், வண்டு, ஹம்ஸம் முதலிய பக்ஷி விசேஷங்களையும் தூதர்களாக அனுப்புவது உண்டு. அசேதநங்களை அனுப்புவதைக்காட்டிலும் சேதநங்களை அனுப்புவது 'விஶ்லேஷிணஸ்ஸ்வவிசாரணவாம் ஸந்தேஶபூர்வகமநிந்த்யபாவாந் யாவந்த்யஸ்ய பவதி கிம்ந்த ஸாக்ஷாந் ஸம்வேத்யமானேஷு' என்று உயர்த்திப்பேசப்பட்டிருக்கிறது. இப்படி நாயகனைப் பிரிந்த பராங்குசநாயகி (நம்மாழ்வார்) நாரை முதலியவைகளை தூது அனுப்பினாள். அப்பொழுது அவள், 'அவர் என்னுடைய ஹேயதையை (தாழ்ச்சியை) நினைத்துஎன்னிடம் வர மறுத்தாலும் 'அவராவி துவராமுன் அருளாழிப் புட்கடவீர் அவர்வீதி ஒரு நாள்' உம்முடைய வாஹநத்திலேறி ஆர்த்தர்களான பக்தர்களை ரக்ஷிக்கப்போகும்போது அவளிருக்கும் வீதி வழியாக வந்துபோம்' என்று சொல்லியனுப்பி 'மகிழ்வுற்றுன்னை வணங்கவாராயே' என்று ஏங்கி நின்றாள்.

பின்பும் நாயகன் வரவில்லை. நாயகிக்கு பிரிந்த வ்யஸநம் தாங்கமுடியவில்லை. 'நந்திக்ராமே ஜடாதாரோ ராஜ்யம் ராமஸ்ய காங்க்ஷயா' என்று பரதாழ்வான் தன்னை முடித்துக்கொள்ளாமல் ஸ்ரீராமன் திரும்பிவருவான் என்கிற ஆசையால் ஜீவித்திருந்தாப்போல் இவளும் முடியவொண்ணாதபடி ஜீவித்திருப்பவளாய் ஒன்றிலும் நிலைகொள்ளாமல், நிற்பதும் நடப்பதுமாய் ச்ரமப்படுகிறாள். அவளுடைய கஷ்டங்களைப் பக்கத்திலிருந்து பார்க்கும் அவள் தாயார் மருமகனுக்கு மகள் படும் கஷ்டத்தை எடுத்துரைக்கிறாள்.

அப்பா! என்னுடைய பெண் உன்னை நினைத்துக்கொண்டு நின்றவிடத்தில் நில்லாமலும் உட்காராமலும் ஆடியாடி மனம் கரைந்து விட்டாள். அவளுடைய நிலையற்ற தன்மையைப்பார்த்தால் நர்த்தனம்செய்வதுபோலிருக்கிறது. அது தாளங்கொட்டுபவர்கள் அறிந்து ரஸிக்கும்படியானது.

அழகிகளுக்கு எதுதான் அழகாயிராது? 'ஸரஸிஜமநுவித்தம் ஶைவலேநாபி ரம்யம்' 'ரம்யாணாம் விக்ருதிரபி ஶ்ரியம் தநோதி' என்றல்லவோ கவிகளின் வாக்கு இருப்பது. ஸ்ரீ வால்மீகி மஹர்ஷியும் ஸீதாபிராட்டியுடன் ராமலக்ஷ்மணர்கள் காட்டிற்குச்செல்லும்போது கௌஸல்யாதேவி கஷ்டப்படுவதைப் பார்த்து 'ராமலக்ஷ்மணஸீதாபிஸ் ஸுவஶீர்வாதிபிர் ந்ருபம் । ஸஸக்ருதேஷ்வஸ் தஸா நரதேவீவ ராமயா ॥' என்றல்லவோ பேசினார். பெண்ணின் அழகில் ஈடுபட்டவளும் பெண்ணின் தடுமாட்டத்தை ஆடியாடி என்று பேசத் துணிந்தாள்.

நாயகி வருத்தமேலீட்டால் (ஜ்வர வேகத்தால்) வாய் பிதற்றுகிறாள். அது இசையிலே பலகாலும் பாடுவாரையும் ஜயிக்கும்படி இருப்பதை எண்ணி இசைபாடிப்பாடி என்கிறாள். ஸ்ரீராமனும் ஸீதையைக்கண்ட ஹநுமானைப் பார்த்து தன்னைவிட்டுப் பிரிந்த வ்யஸநத்தால் கஷ்டப்பட்டுக் கதறிச் சொல்லியனுப்பியதைப்பற்றிக்கேட்கும்போது 'யதுவாச வாக்யம் வைதேஹீ' என்று சொன்னாரிறே. பிரிந்த வ்யஸநத்தால் துடித்த துடிப்பு நர்த்தனமானாற்போல் வாய்பிதற்றலும் இசையாயிற்று இவளுக்கு. இவ்விதம் ப்ரலபித்த இவளுடைய கரைந்த நெஞ்சு ப்ரவஹிக்குமாபோலே கண்களால் நீரைச்சொரிந்தாள். அத்துடனில்லாமல் இங்குமங்குமாக

எல்லாவிடங்களிலும் அவன் வரவைப் பல காலும் பார்த்தாள். விரஹதப்தைகள் இப்படிப் பார்ப்பதும் ஸஹஜந்தான்.

ஜநகநந்தினியானவள் அசோகவனிகையில் மஹாப்ரஸித்தரான தசரதசக்ரவர்த்தியின் மூத்தபிள்ளை ஸ்ரீராமன் என்பவன் மஹாகுணவான் நல்ல அழகுடையவன் என்று பலவாறாகச்சொன்ன ஹநுமானுடைய வார்த்தைகளையும் அங்குள்ள ராக்ஷஸர்கள் ‘ஹரிஹரி’ என்று குரங்கை வேடிக்கைபார்க்கும்போது சொன்ன வார்த்தைகளையும் கேட்டு நம் துயரைத்தீர்க்க ஹரி வந்திருக்கிறானா? என்று எண்ணி ‘ஸா திர்யகூர்த்வமதஶ்ச தயாவ்யய ஸாக நிரீக்ஷமாணா’ என்று பக்கங்களிலும் மேலும் கீழும் எங்கும் பார்த்தாள். ‘கண்ணன் என்னெக்கலையானே’ என்றபடி நீயிருந்தயிடமான ஒக்கலையிலும் பார்த்தாள் எங்கும் உன்னைக்காணவில்லை.

நரசிங்கா என்று உன் திருநாமத்தைச் சொல்லிக்கூப்பிட்டால் வருவாயென்று ஆச்ரிதருடைய துர்தசையில் ஆச்ரிதர் உன்னைக் கோலுவதற்கு முன்பே ‘எங்குமுளன் கண்ணன்’ என்று எல்லாவிடத்திலுமிருந்து அவனிஷ்டத்தைப் பூர்த்திசெய்விப்பவன் கோளரியானையால் நரசிங்கா என்றாள்.

பின்னும் கந்நிகைப் பருவத்தில் ‘கந்யா வயஸாத ரூபேவ’ என்றபடி வடிவழகிற்குத் தோற்றல்லவோ உன்னை அடைந்தாள். குறள் மாணன் அழகனாகிலும் ப்ரஹ்மசாரியல்லவா? ஸ்ரீராமன் ‘பும்ஸாம் மோஹநரூபாய’ என்று புருஷர்களும் ஸ்த்ரீத்வத்தை ஆசைப்படக்கூடிய அழகுடையவனாகிலும், காட்டில் ஸீதையைப் பிரியநேர்ந்தபோது மிகவும் ச்ரமப்பட்டு ராவணனைக்கொன்று மீட்டு மீண்டும் நாட்டிற்குவந்ததும் நகரசோதனையின்போது வண்ணானின் வார்த்தையைக் கேட்டு காட்டில் விட்டுவிட்டவனல்லவோ. ‘தமத்புதம்’ என்று பிறக்கும்போதே ஆச்சர்யமாக க்ருஷ்ணன் ஜநித்தாலும், ஸூதிகாக்ருஹத்திலிருந்துவெளியில் வரும்போதே அந்த ஆச்சர்யம் மாறிவிடவில்லையா? நரசிங்கன், க்ருஹஸ்தனாய், எப்பொழுதும் லக்ஷ்மீயோடுகூடியவனாய், எடுத்த ரூபத்தை மாற்றிக்கொள்ளாமல் ஈத்ருஶரூபதமாய் இருப்பதால்தான் நரசிங்கா என்றாள்.

‘தகப்பன் சத்ருவானாலோ உதவலாவது? நீர் பகைவனானால் உதவலாகாதோ? ஜ்ஞாநநிஷ்டராய் ஆண்களாயுள்ளவர்களுக்கோ உதவலாவது? பக்திநிஷ்டராய் பெண்களாயுள்ளவர்களுக்கு உதவலாகாதோ? சேராதவடிவு கொண்டோ உதவலாவது? இருந்தபடியே உதவலாகாதோ?’ என்கிற பாவங்கள் தோற்றும்படியாக நரசிங்கா என்று உன்னைக்கூப்பிட்டு ப்ரஹ்லாதனுக்குப்போலே ஒரு ஸ்தம்பம் கிடைக்காமல் கோலையிழந்த கொடிபோல் வாட்டத்தின்மேல் வாட்டமெடுத்துத் தளர்ந்துள்ளாள்.

ஆயையால் உண்மையுரைக்கும் மறைகளிலோங்கும் உத்தமனான நாசிங்கா நீ வந்து இவளின் துயரைப்போக்கு என்று தாயுள்ளத் துடிப்பை வெகு அழகாக எடுத்து நம்மாழ்வார் கீழுள்ள பாட்டில் வெளியிடுகிறார்—

ஆடியாடி யகங்கரைந்து இசை
பாடிப்பாடிக் கண்ணீர் மல்கி
யெங்கும்
நாடிநாடி நரசிங்காவென்று,
வாடிவாடு மிவ்வாணுதலே.

𑌶𑍍𑌰𑍀𑌃

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹 𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃

வரம்

[ஸ்ரீ. உப. வித்வான், திருவரங்கம் திருமலைதாதாசார்ய ஸ்வாமி, M. O. L. திருப்பதி.]

அஸ்மத் பாஷ்ய காரர் அழகியமணவாளன் ஸந்நிதியிலே தாம் ப்ரபத்தியை அநுஷ்டித்து அதைத் தம்மைச்சார்ந்தவர்களும் உள்ளபடியறிந்து அநுஷ்டித்து உய்யவேணுமென்பதற்காக ஶரணாகதிகத்யமென்கிற க்ரந்தத்தைப் பரமக்ருபையால் ஸாதித்தருளியிருக்கின்றார்.

2. 'ஸ்வஸ்தி ஸ்ரீரங்கபர்த்து: கிமபி ததஹம் சாஸநம்' என்று தாமே ஸாதித்தபடி ஸகலலோகோஜ்ஜீவநத்திற்காக வேதாந்தார்த்த பரமரஹஸ்யத்தைச் சிறிதும் ஸந்தேஹமில்லாமல் அதிவிசதமாய் உபதேசிப்பதையே தமக்குக் கர்த்தவ்யமாகக்கொண்ட தேசிகன் ஸுகரமான இப்ரபத்தியைப்பற்றி இக்காலத்தில் என்னென்ன ஸம்சயங்களோ பூர்வபக்ஷங்களோ வரக்கூடுமோ அவற்றையெல்லாம் எடுத்துக் காட்டிப் பரிஹரித்துப் பல க்ரந்தங்களை ஸாதித்திருக்கின்றார்.

3. இவற்றில் ஒன்று ந்யாஸதிலகம். இதில்

𑌉𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌧𑌨𑌞𑍍𑌜𑌯𑌵𑌿𑌭𑍀𑌷𑌣𑌲𑌕𑍍𑌷𑍍𑌯𑌯𑌾 𑌤𑍇
𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌾𑌯𑍍𑌯 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑌣𑌮𑍁𑌨𑍇𑌰𑍍𑌭𑌵𑌤𑌾
𑌵𑌿𑌤𑍀𑌰𑍍𑌣𑌮𑍍 ।
𑌶𑍍𑌰𑍁𑌤𑍍𑌵𑌾 𑌵𑌰𑌂 𑌤𑌦𑌨𑍁𑌬𑌨𑍍𑌧𑌮𑌦𑌾𑌵𑌲𑌿𑌪𑍍𑌤𑍇
𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌪𑍍𑌰𑌸𑍀𑌦 𑌭𑌗𑌵𑌨𑍍 𑌮𑌯𑌿 𑌰𑌙𑍍𑌗𑌨𑌾𑌥 ॥

என்பது ஒரு ச்லோகம். 'ஓ ரங்கநாத பகவானே! நீர் எம்பெருமானாருக்குக் கொடுத்த வரத்தைக் கேட்டு நான் அத்தகைய அவரைச் சார்ந்தவன்' என்று எப்பொழுதும் செருக்குற்ற என் விஷயத்தில் நீ அருள் புரியவேணும்' என்பது இங்குள்ள வாக்யத்தில் ப்ரதாநப் பகுதியின் அர்த்தம்.

4. இதில், ரங்கநாதன் பாஷ்யகாரருக்குக் கொடுத்ததாகக் கூறப்பட்டிருக்கும் வரம் என்ன வரம்? எவ்விதமானது? என்று விமர்சிக்கவேண்டியதாயிருக்கிறது.

5. இங்கு நயினாசார்யருடைய வ்யாக்யாநத்தில் விவரணமொன்றுமில்லை. '𑌵𑌰𑌶𑍍𑌚 — 𑌭𑌗𑌵𑌦𑍍𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌸𑍍𑌯 𑌭𑌗𑌵𑌤𑌾 𑌦𑌤𑍍𑌤𑍋 𑌵𑌰 𑌏𑌵 𑌶𑍍𑌰𑍁𑌤𑍍𑌵𑌾 𑌤𑌤𑍍𑌸𑌮𑍍𑌬𑌨𑍍𑌧𑌾𑌦𑌪𑌿 𑌵𑌯𑌂 𑌭𑌗𑌵𑌤𑌃 𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑌪𑌾𑌤𑍍𑌰𑌂 (𑌭𑌵𑌾𑌮𑌃) 𑌇𑌤𑌿 𑌭𑌾𑌵𑌃' என்றிவ்வளவேயிருக்கின்றது.

6. கௌசிக ஸ்ரீபாஷ்ய ஸ்ரீநிவாஸாசார்யர் செய்தருளிய மற்றொரு வ்யாக்யாநத்தில் அந்த வரம் இன்னதென்று ஸ்பஷ்டமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது.

''𑌶𑍍𑌰𑍀𑌰𑌙𑍍𑌗𑌶𑌾𑌯𑍀𑌤𑌿 𑌵𑌦𑌤𑌿 𑌸𑍍𑌮 '𑌹𑍇 𑌯𑌤𑍀𑌨𑍍𑌦𑍍𑌰
𑌤𑍍𑌵𑌯𑌾 𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌰𑌹𑌸𑍍𑌯𑌾𑌰𑍍𑌥𑌭𑍂𑌤-
𑌪𑍍𑌰𑌪𑌤𑍍𑌤𑌿𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌾𑌪𑌨𑌹𑍇-
𑌤𑍋𑌃 [illegible] 𑌤𑌵𑌾𑌭𑌿-
𑌮𑌾𑌨𑍇 𑌸𑌿𑌦𑍍𑌧𑌾𑌨𑍍𑌤𑍇 𑌵𑌾 𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌤𑍍 𑌵𑌾 𑌪𑌰𑌮𑍍𑌪-
𑌰𑌯𑌾 𑌵𑌾 𑌯𑍇 𑌯𑍇𑌽𑌨𑍍𑌤𑌰𑍍𑌭𑍂𑌤𑌾𑌃 𑌤𑍇 𑌸-
𑌰𑍍𑌵𑍇𑌽𑌪𑌿 𑌦𑍇𑌹𑌾𑌵𑌸𑌾𑌨𑍇 𑌭𑌵𑌤𑍍𑌸𑌮𑍍𑌬-
𑌨𑍍𑌧𑌿𑌸𑌮𑍍𑌬𑌨𑍍𑌧𑌾𑌤𑍍 𑌮𑍋𑌕𑍍𑌷𑌂 𑌯𑌾𑌨𑍍𑌤𑍁' 𑌇𑌤𑌿
𑌵𑌰𑌃''

என்பவை அங்குள்ள பங்க்திகள். இதன் தாத்பர்யமாவது—'ஓ யதீந்த்ரரே! நீர் வேதாந்த சாஸ்த்ரத்தின் ரஹஸ்யார்த்தமான ப்ரபத்தி மார்க்கத்தை ப்ரதிஷ்டாபநம் பண்ணினீரன்றோ அதற்காக உமக்கு ஒரு அநுக்ரஹம் செய்கின்றோம். உமது அபிமானத்திலும் ஸித்தாந்தத்திலும் ஸாக்ஷாத்தாகவோ பரம்பரையாகவோ அடங்கின யாவரும் இந்த தேஹம் கழிந்த உடனேயே உமது ஸம்பந்த முள்ளவர்களின் ஸம்பந்தத்தினால் முக்தி பெறட்டும்' என்றிவ்விதமான வரத்தை என்பது. இந்த ஸ்ரீபாஷ்ய ஸ்ரீநிவாஸ சார்யருடைய பங்க்திகளை நயினாசார்யருடையவையாகச் சில வர்ஷங்களுக்குமுன் எழுதி வைத்த சிலர் அத்தவறை மறைக்கக் கருதி இப்போது

‘இந்த வாக்யமானது கவிதார்க்கிகஸிம்ஹாசார்யருடைய வ்யாக்யானத்திலேயே இருந்ததாகவும், இதை அடியோடே எடுத்துவிடவேணுமென்று சிலர் பார்த்தும் அந்த ஸபையார் இணங்காமையாலே மற்றொருவருடைய வ்யாக்யானத்திலே சேர்த்து அச்சிட்டதாகவும் ஒரு ப்ரஸித்தியுண்டு’ என்று இராத குற்றத்தைப் பிறரிடத்தில் ஏற்றி எழுதுகின்றார்கள். ஸ வெ ஹ் ஷவஞீதி 2திவஹ்தெஷாழ.

7. இனி இவ்வரத்தின்பலனென்னவென்று பார்க்கவேண்டும். உம்முடைய ஸம்பந்தமுள்ளவர்களுடைய ஸம்பந்தத்தால் முக்தி பெறட்டும்’ என்றவிடத்தில் புத்ரன், சிஷ்யன், சுச்ரூஷை செய்கிறவன் என்றிப்படி ஒரு ஸம்பந்தம் கருதப்பட்டதா? அல்லது அவர்கள் எம்பெருமானிடத்தில் அநுஷ்டிக்கும் ப்ரபத்தியில் அந்தர்ப்பூதனாயிருப்பது என்ற இந்த ஸம்பந்தம் கருதப்பட்டதா? என்பது கேள்வி.

8. பக்தி அல்லது ப்ரபத்தி இல்லாவிடில் முக்தியில்லை என்பது ஸர்வப்ரமாணஸித்தமாய் ஸர்வ ஆசார்யர்களும் நிஷ்கர்ஷித்தவிஷயமானபடியினால் முதல் பக்ஷம் கூடாது. ‘எம்பெருமானே ஸாக்ஷாத் இப்படி வரம் தந்திருப்பதனால் அந்த ஶாஸ்த்ரார்த்தத்தை இங்கு ஸம்பந்தப்படுத்துவது யுக்தமன்று. இது ஸ்வதந்த்ர ப்ரமாணம்’ என்னில் இது யுக்தமன்று

> ‘ஜந்ம கம்ம ச மெ திவ்யமெவம் யொ வெத்தி தத்வத꞉ । த்யக்த்வா தெஹம் புநர்ஜந்ம நைதி மாமெதி ஸொऽர்ஜுந ॥’

என்று ஸாக்ஷாத் க்ருஷ்ணன் அவதாரரஹஸ்யஜ்ஞானம் முக்திப்ரதம் என்று ஸுஸ்பஷ்டமாய் உபதேசித்திருக்கச் செய்தேயும் அதை அப்படியே கொள்ளாமல் பக்தியை உண்டாக்கி அதன் த்வாரா இது முக்திப்ரதமென்று ஸ்ரீபாஷ்யகாரர் ஸாதித்திருக்கின்றார். தேசிகனும் ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரம் அதிகாரிவிபாகாதிகாரத்தில்—

‘முதலியாண்டானருளிச் செய்த பாசுரம். சுமெயாzநய...என்று ந்யாஸதிலகத்திலே சொன்னோம். ஏதேனுமொருப்ரகாரமாகவுமாம் ஆரேனுமொருவர் அநுஷ்டிக்கவுமாம் ப்ரபத்திக்கல்லது ஸர்வேச்வரன் பரமபுருஷார்த்தம் கொடுக்கவிரங்கானென்றதாயிற்று. இப்படி ‘வஶாஹ்நாஷ்ய꞉ வக்ஷீவா யெவ வெஷ்ணவஸம்ஶ்ரயா꞉...’ என்றும் ‘தெவயம் ஸவதா ரக்ஷ்யா ஸவமிஷயவாஸிந꞉...’ என்றும் ‘நற்பாலயோத்தியில்...’என்றும், ‘வன்மையாவதுன் கோயிலில்...’ என்றும் சொல்லுகிற பாகவதாபிமானபகவத்விஷயவாஸாதிகளுக்கும் தன்பக்கலிலேயாதல் பிறர்பக்கலிலேயாதல் முன்பேயாதல் பின்பேயாதல் ஒரு உபாயத்துவக்குண்டு...’

‘என்றும், பரமதபங்கம் பரோக்தோபாயபங்காதிகாரத்தில் ‘இப்படியே அத்வேஷாபிமுக்யாதிமாத்ரம், அவதாரரஹஸ்யஜ்ஞானம், புருஷோத்தம வித்யை, ஸம்பந்தஜ்ஞானமாத்ரம், அத்யவஸாயமாத்ரம், ஸங்கீர்த்தநமாத்ரம், உக்திமாத்ரம், ப்ரார்த்தநாமாத்ரம், விஷயவாஸாதிமாத்ரம், ஸ்வப்ரவ்ருத்திநிவ்ருத்தி, வைஷ்ணவாபிமானம், ஆசார்யபரிக்ரஹம், புருஷகாரவிசேஷம், ஈச்வரஸ்வாதந்த்ர்யக்ருபாநிர்ஹேதுகவிஷயீகாராதிகள் என்றிவற்றைத் தனித்தனியே மோக்ஷோபாயமென்னும் பாசுரங்களெல்லாம் ந்யாஸோபாஸநரூபவித்யாவிதிகளுக்கு விரோதம்வாராதபடி நிர்வஹித்துக்கொள்வது’

என்றும் விசதமாய் ஸாதித்திருக்கின்றார். ஆகையால் பக்திப்ரபத்தி இவ்விரண்டைத் தவிர மற்ற எதற்கு மோக்ஷபலகத்வம் சொல்லியிருந்தாலும் அதெல்லாம் பக்தியையோ ப்ரபத்தியையோ உண்டாக்கி அதன் த்வாரா முக்தியில் முடியுமாதலின் பாம்பரயா ப்ரயோஜகமென்று கொள்ளவேணுமேயன்றி பக்திப்ரபத்திகள்போலே அதுவும் ஸ்வதந்த்ரமாய் முக்திஸாதநமென்று கொள்ளக்கூடாதென்பது அவிசால்யமாய் அநாக்ஷேப்யமாய் தேறிநிற்கும் பரமஸித்தாந்தம்.

9. இதனால் திவ்யப்ரபந்தங்களிலும் மற்ற ஸ்தோத்ரங்களிலும் அந்தந்த ஸ்ரீஸூக்தியின் அநுஸந்தாநத்திற்குப் பலமாக மோக்ஷம் சொல்லப்பட்டிருக்கும்போதும் அதற்குப் பாம்பரயா உபகாரகத்வமே உள்ளதென்பது வ்யக்தம்.

10. இனி பாஷ்யகாரஸம்பந்தஸம்பந்திகளும்

ப்ரபத்தியநுஷ்டித்தே முக்திபெறுவதாயின் வரம் பெற்றது எதற்காக? எனக் கேள்வி எழுகின்றது. அதற்கு உத்தரம்—நல்ல குலத்தில் பிறந்தும் பலர் மோக்ஷசிந்தையேயிராமலும் ஸதாசார்யகடாக்ஷம் பெறாமலும் பசுபக்ஷ்யாதிகள்போல் மரித்துப்போகின்றனர். அவ்வாறன்றி பகவத்ராமாநுஜனின் அபிமானத்திலும் ஸித்தாந்தத்திலும் அந்தர்ப்பூதராயிருப்பவருக்கு அந்தக்காரணத்தாலேயே அந்த ஶரீராவஸாநத்திற்குள் ஸதாசார்யபரிக்ரஹமுண்டாகி ப்ரபத்தி அநுஷ்டிக்கப்பட்டுப் பிறகு முக்தி அவச்யம் உண்டாகும் என்பது வரத்தினால் ஏற்பட்டவிசேஷம்.

11. ‘விதாஹம் நாத ...ம் விஶோக ... ஶ்ருத ...தயிதவா’ என்றவிதில் தேசிகன் ஸாதித்தபடி நாதமுநிகளின் ஸம்பந்தத்தினால் தமக்கு என்ன விசேஷமுண்டென்று ஆளவந்தார் ஸாதித்தாரோ அந்த விசேஷம் எம்பெருமானார் ஸம்பந்திஸம்பந்திகளுக்கு உண்டாயிருப்பது இந்த வரத்தினால்தான் என்பது தேசிகன் திருவுள்ளத்தையறிந்து செய்யவேண்டிய நிஷ்கர்ஷம்.

12. முதலியாண்டான்பாசுரத்தில் ஆசார்ய நிஷ்டையின் பலம் பேசப்படுகின்றது. ஸிம்ஹ ஶரீரத்தில் இருக்கும் ஜந்து ஸிம்ஹம் ஒரு மலையிலிருந்து மற்றொரு மலைக்குத் தாவும்போது தானும் அங்குப்போய்ச்சேர்கின்றது. அந்த ஜந்து ஸிம்ஹம் தாவும் ஸமயத்தில் அதன் ஶரீரத்தில் ஒட்டிக்கொண்டிராமல் கீழே இறங்கி இருந்ததாகில் அந்த பலனை அடையாது. முன் அதன் ஶரீரத்தில் ஒட்டிக்கொண்டிருந்ததற்காகவோ மறுபடி அது திரும்பிவந்தபிறகு ஒட்டிக்கொள்ளப் போவதற்காகவோ அந்த பலனை அது பெறமுடியாது. அதுபோல் பாஷ்யகாரர் தாம் அநுஷ்டித்த ப்ரபத்தியில் ‘...மதே ... ... ஹவது’ என்று முதலியாண்டானையும் சேர்த்துக்கொண்டாராதலால் இவருக்கும் ஸம்ஸாராதிலங்கநம் ஏற்பட்டது. அப்படியிராமலிருந்தால் இது ஏற்பட்டிராது. இவருக்கும் சேர்த்து என் ப்ரபத்தியை அவர் அநுஷ்டித்தாரெனில் அதற்கு ஹேது இவருக்கு அவரோடுண்டான குடல்துவக்கு.

13. இப்படி வ்யாக்யாநத்தில் நிர்த்தேசித்த வரத்தை ஆராய்ந்தாலும் பாஷ்யகாரர் தமது சிஷ்யப்ரசிஷ்யர்களுக்குள் யார்யாருக்கு முக்திஸாதநமாய் ப்ரபத்தியை அநுஷ்டித்தாரோ அவர்கள் தவிர மற்றவர்களுக்கெல்லாம் தனியே ததர்த்தம் ப்ரபத்தி ஆவச்யகமென்றும் ஆனால் பகவத்பாஷ்யகாராபிமாநத்திற்குப் பாத்ரர்களாய் தத்ஸித்தாந்தாவலம்பிகளான பாக்யசாலிகளுக்கு அவச்யம் அது நடந்துவிடும் என்றும் நிரூபிக்கப்பட்டது.

14. ஆனால் இந்த வரத்தின் ஸ்வரூபம் உபபந்நமா என்பதைப்பற்றிப் பரிசீலநம் செய்யவேண்டியதாயிருக்கின்றது. பாஷ்யகாரருடைய அபிமாநத்திலும் ஸித்தாந்தத்திலும் ஸாக்ஷாத்தாக அடங்கினவர்கள் முதலியாண்டான் முதலானோர். இவருடைய சிஷ்யபுத்ர பௌத்ராதிகள் அவற்றில் பாம்பராயா அடங்கினவர்கள். இவர்களுக்கு பாஷ்யகாரஸம்பந்தியான முதலியாண்டான்ஸம்பந்தத்தால் முக்தி என்பது யுக்தம். அவற்றில் ஸாக்ஷாத்தாக அடங்கினவர்களான முதலியாண்டான் முதலியோருக்கு எம்பெருமானார் ஸம்பந்தமேயன்றி தத்ஸம்பந்திஸம்பந்தமில்லை. இல்லாத இந்த ஸம்பந்தத்தினால் மோக்ஷமென்பது சேராது. வாக்யம் அந்வயிக்கவில்லை.

15. இனி ச்லோகத்தில் ‘எம்பெருமானாருக்கு நீ கொடுத்த வரத்தை’ என்றதற்கு முன் ‘அர்ஜுநனையும் விபீஷணனையும் குறித்து நீ சொன்ன வார்த்தையை எடுத்துக்காட்டி நம்பச்செய்து’ என்றிருக்கிறது. ஸ்ரீரங்கநாதன் தான் வரம் கொடுக்கும்போது ‘ஸக்ருதேவ ப்ரபந்நாய’ ‘ஸர்வதர்மாந் பரித்யஜ்ய’ இத்யாதியான தன் வார்த்தைகளை எடுத்துச்சொல்லி இதில் நீ ஸந்தேஹப்படவேண்டாமென்று விச்வஸிப்பித்தார் எனப் பட்டிருக்கிறது.

16. ஶரணாகதி கத்யம் ஸ்ரீரங்கநாதனுக்கும் பகவத்பாஷ்யகாரருக்கும் நடந்த ஸம்வாதமென்பது ப்ரஸித்தம். இதில் இந்த வசநங்களையெடுத்து ரங்கநாதன் பாஷ்யகாரரைத் தேற்றினது ஸ்பஷ்டமாகச் சாணப்படுகின்றது. ‘நாதே ஹ்ருதி ஸம்ஶய: ......இதி மமைவ ஹ்யநுஷ்டிதம் । ...ஸ்வம் த... ...’

அர்ஜுநஸ்ய விபீஷணஸ்ய வா நிஸ்ஸம்சய: ஸமாச்வாஸ’ என்பது அங்குள்ள பகவத் வாக்யம். இப்படி ச்லோகத்தில் சொல்லப்பட்ட இந்த விச்வாஸநம் இந்த ஸம்வாதத்தில் காணப்படுவதால் வரமும் இங்குள்ளதேயா என்று விமர்சிப்பது யுக்தம்.

17. தமது ச்லோகத்தில் நிர்த்தேசித்த வரம் இது என்று தாமே தேசிகன் ஜ்ஞாபித்திருந்தால் அதுவே க்ராஹ்யமென்பதிலும் விப்ரதிபத்திபண்ணுவதற்கில்லை.

18. கத்யபாஷ்யத்தில் ‘ததஸ்ய யாவத் ஸ்வரூபம் நித்யகிங்கரோ பவேதி உக்த வரஸ்ய ப்ரார்த்யமானத்வம் ஸூசிதம்’ என்று ஸ்வாமி ஸாதித்திருக்கின்றார். இதனால் ஸ்வாமி திருவுள்ளத்தில் இருக்கும் வரம் ‘நித்யகிங்கரோ பவாநி’ என்று பாஷ்யகாரர் கேட்டு ‘நித்யகிங்கரோ பவ’ என்று எம்பெருமான் கொடுத்தவரமேயென்பதில் சிறிதும் ஸந்தேஹத்திற்கிடமில்லை.

19. இப்படித் தாம் நேரில் கேட்டு எம்பெருமானிடத்தில் வரம்பெறும்படி அவ்வளவுபகவதந்தரங்கரான எம்பெருமானாருடைய ஸம்பந்தமுள்ளஎனக்கு எம்பெருமான் க்ருபை பண்ணாமல் எப்படியிருப்பன்? என்பதாகத் தமக்கொரு ஸாத்விகாஹங்காரமிருப்பதாக ஸ்வாமி பேசுகின்றார்.

20. இவ்வளவில் தேறிய முழு ச்லோகத்தின் அர்த்தமாவது—‘விபவாவதாரகாலத்தில் அர்ஜுநனையும் விபீஷணனையும் குறித்துச் சொன்ன உன் வார்த்தைகளால் விச்வஸிப்பித்து, அதாவது-என் வார்த்தை ஒருபொழுதும் பொய்யாகாது என்று தேற்றி, நித்யகைங்கர்யஸாம்ராஜ்யத்தை நீ பெறுவாய்’ என்கிற வார்த்தை ஸ்ரீராமானுஜனுக்கு நீ கொடுத்தாயே அதைக் கேட்டு ‘அவரைச் சேர்ந்தவனாயிற்றே நான். எனக்கு எம்பெருமான் க்ருபை பண்ணாமல் ஒருநாளுமிருக்கமாட்டான்’ என்று எப்பொழுதும் கர்வமுடையேன் யான். ஆகையால் எம்பெருமானே நீ அருள் புரியவேணும்’ என்பது.

21. ஸ்வயமாகவோ ஆசார்யமூலமாகவோ ப்ரபத்யநுஷ்டாநம் ஆனபின்பு எந்த விஷயத்தில் இப்போது ப்ரஸாதம் ப்ரார்த்திக்கப்படுகிறதென்னில், இது மேல் சுலோகங்களால் அறியக்கிடக்கின்றது. உத்தரக்ருத்யம் செய்வனே நடக்கவேண்டியவிஷயத்தில் இந்த ப்ரஸாத ப்ரார்த்தனை. ‘ஸ்வதந்த்ரப்ரபத்யநுஷ்டாநம் பண்ணினவனுக்கு இங்குற்ற கைங்கர்யாபிவ்ருத்தியையுண்டாக்கி உபகாரகங்களாம்’ என்ற அதிகாரவிபாகாதிகார ஸ்ரீஸூக்தியை பராமர்சிக்கவேணும்.

22. ப்ரபத்திவிஷயத்தில் த்ருடமாய் புத்தியில் தரிக்கவேண்டிய விஷயங்களாவன—

1. பக்திபோலவே இதுவும் சாஸ்த்ரவிஹிதமாகையால் இதற்கும் உபாயத்வம் உண்டு.
2. இது அத்யல்பப்ரயத்நஸாத்யமாகையாலே வ்யாஜமாத்ரமெனப்படும். பகவானே உபாயபூதன் அதாவது—பலப்ரதன் என்கிற அத்யவஸாயரூபமாகையாலே இதற்கு ஸாக்ஷாத் பலஸாதநத்வம் தோன்றுது. அது நிமித்தமாக இதற்கு உபாயத்வமில்லையென்பர். ஆனால் இது அதிவாதமே. இதைக்கொண்டு சாஸ்த்ரங்களை பாதிக்கவொண்ணாது. ஆகையால் வஸ்துவ்ருத்தியில் இதற்கு உபாயத்வமில்லையென்பது யுக்தமன்று.
3. சாஸ்த்ரபோதிதமான பலஸாதநத்வத்திற்கு ப்ரமாணாந்தராபேக்ஷையிராமையாலே நியதாந்வயவ்யதிரேகசாலித்வமில்லையென்று கொண்டு சாஸ்த்ர ப்ரமிதமான ஸாதநத்வத்தை இல்லையென்பது கூடாது.
4. பக்தியுமிராமல் ப்ரபத்தியுமிராமல் எம்பெருமான் ஒருவருக்கும் மோக்ஷம் கொடான். ‘இன்றென்னைப் பொருளாக்கித் தன்னையென்னுள் வைத்தான்’ என்ற நம்மாழ்வார் ஸ்ரீஸூக்தியின் தாத்பர்யத்தை தேசிகன் ஸித்தோபாயசோதநாதிகாரத்தில் ஸாதித்திருக்கின்றார்.

5. ஈட்டிலும் ‘ஸர்வமுக்திப்ரஸங்கபரிஹாரார்த்தமாக அவனுக்கு உண்டென்னவுமாம்’ என்றவித்தால் ஆழ்வார் பக்கல் ஒரு உபாயம் இருந்ததென்றே முடிகின்றது. இதற்குமுன் ‘ஆக இது உபாயமாகையாலே இவர்க்கு இல்லையெனலாம்’ என்றுள்ளவிதில் ஸாத்விகத்யாகமுறையில் ஆழ்வார் தம்மிடத்திலுள்ள அல்பவ்யாஜத்தில்உபாயத்வபுத்தியை அறவே ஒழித்தார் என்றவிது சொல்லப்படுகின்றது.

6. ஆசார்யர்களில் எவரும் ப்ரபத்தியை உபாயமாக ஶாஸ்த்ரம் விதிக்கவில்லையென்றாவது அது அப்ராமாணமென்றாவது சொல்லவில்லை. ஆகையால் சிலவிடங்களில் உபாயமில்லையென்று சொன்னதற்குத் தாத்பர்யம் வ்யாஜமாத்ரம், எம்பெருமானே ப்ரதானமான ஸாக்ஷாதுபாயம் என்பதே.

7. இப்படியன்றி வஸ்துவ்ருத்தியிலேயே அதற்கு உபாயத்வமில்லையென்னில் ‘பக்த்யா பரமயாவாபி ப்ரபத்த்யா வா’ ‘முமுக்ஷுர்வை ஶரணமஹம் ப்ரபத்யே’ இத்யாதி ப்ரமாணங்கள் பாதிதங்களாம்.

8. தேசிகனும் உபாயத்வதியம் ருந்தே என்றார். உபாயத்வம் ருந்தே எனவில்லை.

9. ஶாஸ்த்ரங்கள் பலஸாதநமாகவொன்றை விதித்தால் அந்தஸாதநத்தை அநுஷ்டிப்பவர்களுக்குத்தான் அந்த பலம் உண்டாகும். மற்றவர்களுக்கு உண்டாகாது என்பது ‘ஶாஸ்த்ரபலம் ப்ரயோக்தரி’ என்ற மீமாம்ஸாந்யாயஸித்தம்.

10. பிதா செய்யும் ஜாதேஷ்டியினால் புத்ரனுக்கும் புத்ராதிகள்செய்யும் ச்ராத்தத்தினால் பித்ராதிகளுக்கும் பலம் உண்டு என்பது விசேஷஶாஸ்த்ரத்தினால் ஸித்திக்கின்றது. இப்படியே ‘யாவந்த: ஸ்வஸ்யஸ்ய ஶிஷ்யா ஐதேஷ்வபி நிவேதயேத்’ என்று விசேஷ ஶாஸ்த்ரமுண்டாகையால் ஒருவர் மற்றொருவரை உத்தேசித்து அநுஷ்டிக்கும் ப்ரபத்தியினாலே மற்றவருக்கும் பலமுண்டென்பது ஸித்தம்.

11. ஆகவே பாஷ்யகாரர் யார்யாருக்காக ப்ரபத்தியைஅநுஷ்டித்தாரோ அவர்களுக்கெல்லாம் பலஸித்தி உண்டென்டென்பது ப்ராமாணிகம். இதுவன்றி அவர் யாருக்குப்ரபத்தியநுஷ்டிக்கவில்லையோ அவர்களும் அவருடைய சிஷ்யத்வாதிஸம்பந்தமாத்ரத்தாலே பேறுபெறுவர் என்பது அப்ராமாணிகம்.

12. ப்ரபத்தியிராத வெறும்ஸம்பந்தமாத்ரத்திற்கு முக்திஸாதநத்வமுண்டென்கிற ப்ரமாணமொன்றுமில்லை. ஜ்ஞாநத்தினாலேயே முக்தியென்கிற ப்ரமாணங்களுக்கு விருத்தம். ஸ்தோத்ரதிவ்யப்ரபந்தாதிகளில் தத்தத்பாடமாத்ரத்தாலே முக்தி லபிக்கும் என்றது அந்தந்த ஸூக்திப்ரசம்ஸாபரமாகையாலே அதனால் புதிதாய் ஒரு உபாயம் விதிக்கப்பட்டதாக ஆகாது. ‘ஃபலவத்ஸந்நிதாவஃபலம் ததங்கம் ஸ்யாத்’ என்பது மீமாம்ஸா ந்யாயம். தஹரவித்யாசேஷமான ஆத்மோபாஸநத்திற்குச் சொன்ன பரமபுருஷார்த்தபலம் அங்கியான தஹரவித்யாபலமேயன்றி அதற்கே ஸாக்ஷாத்பலமன்று என்ற ஸித்தாந்தத்தையும் காண்க.

ஸ்ரீ:

பஞ்சாங்க ஸங்க்ரஹம்

நந்தனஸ்ரீ ஆனிமீ-1952ஸ்ரீ ஜூன்-ஜூலை மீ

[உத்தராயணம்-க்ரீஷ்ம ருது - மிதுனமீ]

14—6—52	1உ	சனிக்கிழமை	... சூன்ய திதி; மிதுநரவி 17-39. (இன்று ஸங்க்ரமண தர்ப்பணம்)
15—6—52	2உ	ஞாயிற்றுக்கிழமை	... சூன்யதிதி.
16—6—52	3உ	திங்கட்கிழமை	... மிதுனக்ருஷ்ண நவமி திதி.
17—6—52	4உ	செவ்வாய்க்கிழமை	... தசமி-ஏகாதசி திதித்வயம்.
18—6—52	5உ	புதன்கிழமை	... த்வாதசி திதி. ஸர்வ ஏகாதசி.
19—6—52	6உ	வியாழக்கிழமை	... த்ரயோதசி திதி
20—6—52	7உ	வெள்ளிக்கிழமை	... சதுர்த்தசி திதி
21—6—52	8உ	சனிக்கிழமை	... அமாதிதி; ● ஸர்வ அமாவாஸ்யை.
22—6—52	9உ	ஞாயிற்றுக்கிழமை	... அதிதி.
2—7—52	19உ	புதன் கிழமை	... ஸ்வாதி *பெரியாழ்வார் திருநக்ஷத்ரம்.
3—7—52	20உ	வியாழக்கிழமை	... ஸர்வ சயன ஏகாதசி.
4—7—52	21உ	வெள்ளிக்கிழமை	... ஹரிவாஸரம் 4-30. அனுஷம் *ஸ்ரீமந்நாதமுநிகள் திருநக்ஷத்ரம்.
7—7—52	24உ	திங்கட்கிழமை	... ஸ்ரீ அஹோபிலமடம் ஸ்ரீ அழகியசிங்கர்களின் ஸங்கல்ப்பமஹோத்ஸவாரம்பம்.
9—7—52	26உ	புதன்கிழமை	... த்விதீயை த்ருதீயை திதித்வயம்.
13—7—52	30உ	ஞாயிற்றுக்கிழமை	... மிதுன க்ருஷ்ணஸப்தமி திதி.
14—7—52	31உ	திங்கட்கிழமை	... மிதுனக்ருஷ்ண அஷ்டமி திதி.
15—7—52	32உ	செவ்வாய்க்கிழமை	... சூன்ய திதி; கடகரவி 54-17. (இன்று ஸங்க்ரமண தர்ப்பணம்)

குறிப்பு:-இவ்வருஷம் த்விதீயாத்யுபாகர்மாவை ஆடி-மீ 21-ம்தேதி செவ்வாய்க்கிழமை செய்யவேண்டியது.

ஆடி மாதத்தில் க்ரஹணதோஷமிருப்பதால் ‘ஸிம்ஹஸ்தே[illegible] ஶ்ராவணீ தூஷிதா யதி’ என்கிற வசநப்படிப்ரதமோபாகர்மாவை ஆவணி மாதத்தில்(ஸிம்ஹ[illegible]) 19-ம் தேதி புதன்கிழமை செய்யவேண்டியது.

Regd. No. M. 4437

OFFICE OF THE REGISTRAR ... 389 ... 1952 MADRAS

ஸ்ரீ அஹோபில மடம்

ஸம்ஸ்க்ருத கலாசாலை மதுராந்தகம்

- இக்கலாசாலையில் சென்னை யூனிவர்ஸிடியாரால் நடத்தப்படும் ந்யாய வ்யாகரண சிரோமணிப் பரீக்ஷைகளுக்கு வித்யார்த்திகளுக்கு பாடப்ரவசநம் செய்யப்படுகிறது. சென்னை ஸர்க்காரால் நடத்தப்படும் ப்ரவேசப் (Entrance) பரீக்ஷையில் தேர்ச்சிபெற்ற மாணவர்களே சிரோமணி 1-வது வகுப்பில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். சிரோமணி பரீக்ஷைப்பாடங்களை 4-வருஷத்தில் போதிக்கப்படுகின்றன. இரண்டாவது வருஷ முடிவில் வித்யார்த்திகள் பூர்வாங்கப் (Priliminary) பரீக்ஷைக்கு அனுப்பப்படுவார்கள். 4-வது வருஷமுடிவில் கடைசி (Final) பரீக்ஷைக்கு அனுப்பப்படுவார்கள்.

- சென்னை சர்க்கார் நடத்தும் ப்ரவேசப் பரீக்ஷைக்கும் வித்யார்த்திகளுக்குப் பாடப்ரவசனம் செய்யப்படுகிறது. ஷ வகுப்பிலும் அதற்குக் கீழ்ப்பட்ட வகுப்புகளிலும் வித்யார்த்திகள் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

- யஜுர்வேதம் திவ்யப்ரபந்தம் இவைகளைத் தனித்தனியே அத்யயனம் செய்விக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

- இக்கலாசாலையில் எல்லா வித்யார்த்திகளுக்கும் கணிதம் தமிழ் முதலிய பொது அறிவுப்பாடங்களும் போதிக்கப்படும்.

- வித்யார்த்திகளுக்கு போஜனாதி ஸௌகர்யங்களும் இலவசமாகச் செய்து கொடுக்கப்படும்.

- உபநயனமானவர்களே கலாசாலையில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். ஆனால் நல்ல யோக்யதை இருந்தால் ரொம்ப ஏழையாயுள்ள வித்யார்த்திகளுக்கு உபநயனமும் செய்வித்து கலாசாலையில் சேர்த்துக்கொள்ள ஏற்பாடு செய்யப்படும்.

- கலாசாலையில் சேரவிரும்பும் மாணவர்கள் (1) தங்கள் பெயர், (2) பிறந்த தேதி & வயது, (3) தகப்பனார் பெயர், (4) தற்போதுள்ள யோக்யதாம்சம், (5) ஏற்கனவே தேரிய பரீக்ஷை விவரங்கள், (6) சேரவிரும்பும் வகுப்பு முதலியவைகளையும் தங்கள் முழு விலாஸத்தையும் விவரமாக எழுதி **10—6—1952**க்குள் கலாசாலை ப்ரின்ஸ்பாலுக்கு மனுச்செய்துகொள்ளவேண்டும். நற்சாக்ஷிப்பத்திரங்கள் அல்லது சர்டிபிகேட்டுகள் ஏதாவது இருந்தால் அவைகளையோ அவைகளின் ஸரியான நகலையோ மனுவுடன் அனுப்பவேண்டும். சேரவிரும்பும் வித்யார்த்திகள் நேரே ஆஜராகி வாக்குப் பரீக்ஷை கொடுக்கவும் தயாராயிருக்கவேண்டும். கலாசாலையில் சேர்த்துக்கொள்ளும் விஷயத்தில் கலாசாலாதிகாரிகளின் தீர்ப்பே முடிவானது. மற்ற விவரங்களுக்கு கலாசாலை ப்ரின்ஸ்பாலுக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

- மனு அனுப்பவேண்டிய விலாஸம்—

பிரின்ஸ்பால்,

ஸ்ரீ அஹோபிலமடம் ஸம்ஸ்க்ருதகலாசாலை,

மதுராந்தகம்.

Printed by J. RANGACHARIAR, Srikaryam, Sri Ahobila Mutt, at Malola Press, 30, Panagal Street, Tiruvallore.
Edited and Published by P. S. SrinivasaDesikachariar, M A., B.L., No. 2, Audiyappa Mudali Street, Vepery, Mad: 7